
ஆரம்பம் 1969 பெப்ரவரி

ISSN: 2012 - 6352 Reg. No.: 187317

# தொண்டன்

அறிவோம்.. அறிவிப்போம்...

சமய – சமூக – இலக்கிய வெளியீடு












# தொண்டன்

அறிவோம் ... அறிவிப்போம் ...

ஆரம்பம் - 1969 பெப்ரவரி

மலர் - 53 இதழ் - 03

மார்ச் - 2022



ஆசிரியர் :

■ அருட்தந்தை. நிகஸ்டன் பீற்றஸ்

துணையாசிரியர் :

■ பெஸ்லியோ வாஸ்

நூல் வடிவமைப்பு :

■ சுபாஜெனி சங்கர்



**வெளியீடு**

சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். - 44,
மட்டக்களப்பு.

**பதிப்பகம்**

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.


## உள்ளே...


| | |
|---|---|
| மனம்மாறி நறிசெய்தியை | 02 |
| மாணவர் பக்கம் | 05 |
| ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவை | 06 |
| திசை மாறிய ஓடம் | 09 |
| ஒரு வெண்மணற் கிராமம் | 10 |
| கடுகுக் கதை | 13 |
| ஓயாத ஓலங்கள் | 14 |
| சோதனை தரும் போதனை | 15 |
| அன்பெனும் சுடராய் | 16 |
| இலக்கிய மஞ்சரி | 18 |
| எப்படிக் கண்டுபிடிச்சீங்க | 19 |
| பார்வைகள் பலவிதம் | 20 |
| திருஅவைச் செய்திகள் | 21 |
| சட்டங்கள் | 22 |
| இலங்கை கத்தோலிக்க | 23 |
| தூய வாழ்வும்மனம் | 24 |
| ஆரோக்கியம் | 25 |
| வினாவிடைப் போட்டி | 26 |
| திருவிவிலியம் கற்போம் | 27 |
| போட்டி முடிவுகள் | 28 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL : 065 2226486
E-MAIL : battiscc@gmail.com


விலை: : 50/=

ஆண்டுச் சந்தா : 960/=

(தபாற் செலவு உட்பட)

# அன்புடன் உங்களோடு ...

*தூயவராகவே வாழ்ந்திடுவோம்..... இறைவன் பணியில் நாம் இணைவோம்*
*இரக்கத்தின் காலம் இதுவல்லோ .... நாம் இறைவனின் பிள்ளைகளாகிடுவோம்*

**கிறிஸ்து இயேசுவில் அன்பார்ந்த சகோதரங்களே!**

உலகம் மிகவும் வேகமாகச் சுழன்றுகொண்டிருக்கின்றது. வருடம் ஆரம்பித்து இரண்டு மாதங்கள் மிக வேகமாக கடந்து சென்ற நிலையில் தவக்காலத்தையும் ஆரம்பித்துவிட்டோம். அருளின் காலமாம் இத்தவக் காலத்தில் நுழைந்துள்ள எம்மை இறைவன் அவரது இரக்கத்தை அதிகமாக அனுபவிக்கவும் அதை மற்றவரோடு பகிர்ந்துகொள்ளவும் அழைப்பு விடுக்கின்றார். இக்காலத்திலே நாங்கள் விஷேட விதமாக நோன்பிருப்போம்: ஒறுத்தல்கள் செய்வோம்: அதிகமாக ஆலய வழிபாடுகளிலே கலந்துகொள்வோம்: யாத்திரைகள் செல்வோம்: பெரிய, சிறிய சிலுவைப்பாதைகளை மேற்கொள்ளுவோம். நற்செய்திலே இயேசு எமக்குச் சொல்லுவார், இவை அனைத்தும் வெளி அடையாள பக்தி முயற்சிகளாக மாத்திரம் இருந்துவிடக்கூடாது.

"மக்கள் பார்க்க வேண்டுமென்று அவர்கள் முன் உங்கள் அறச் செயல்களைச் செய்யாதீர்கள். இதைக் குறித்து நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள். இல்லையென்றால் உங்கள் விண்ணகத் தந்தையிடமிருந்து உங்களுக்குக் கைம்மாறு கிடைக்காது.

நீங்கள் தர்மம் செய்யும்போது உங்களைப்பற்றித் தம்பட்டம் அடிக்காதீர்கள். வெளிவேடக்காரர், மக்கள் புகழ வேண்டுமென்று தொழுகைக் கூடங்களிலும் சந்துகளிலும் நின்று அவ்வாறு செய்வர். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.

நீங்கள் தர்மம் செய்யும்போது, உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும்.

அப்பொழுது நீங்கள் செய்யும் தர்மம் மறைவாயிருக்கும். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார்" **(மத் 6 : 1-4)**

நாம் செய்யும் இறைவேண்டலும், தர்மமும், பிறரன்புச் செயல்களும், நாம் கடைப்பிடிக்கும் நோன்பும் எமக்கு உள்ளார்ந்த மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். நாம் நன்மை செய்கின்றோம் என்பதை மற்றவர்களுக்கு வெளிப் படுத்தி செய்வதனால் அதற்குரிய புகழ்ச்சியும் கைம்மாறும் இவ்வுலகில் மனிதரிடமிருந்து இலகுவாக கிடைத்து விடும் ஆனால் நிலைத்து நிற்காது. நாம் இறைவனிடமிருந்தே கைம்மாறு பெறவேண்டும். ஏனெனில் இறைவன் தான் இதை செய்யும்படியாக எமக்கு அழைப்பு விடுக்கின்றார். இறைவன் விரும்புவதை அவர் கேட்கின்றவாறே செய்யும்போது அவர் தரும் கைம்மாறு நிலையாயிருக்கும்.

ஆகவே இந்த தவக்காலத்திலே, எங்களுடைய ஜெபங்களாக இருக்கட்டும், தர்மங்களாக இருக்கட்டும், பிறரன்புச் செயல்களாக இருக்கட்டும், யாத்திரைகளாக இருக்கட்டும் நோன்பாக இருக்கட்டும் இவையனைத்தும் வெறுமனே வெளி அடையாளமாக அல்லாமல் எமது ஆன்ம திருப்திக்காகவும் இறையுறவை பலப்படுத்துவதற்காக வும் மேற்கொள்ளுவோம். இத்தவக்காலம் உண்மையிலேயே எமது வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தட்டும்.

**மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தை உங்களுக்கு கைம்மாறு அளிப்பார்** (மத். 6:4).

– ஆசிரியர் –

# மனம்மாறி
# நற்செய்தியை நம்புங்கள்! (மாற் 1:15)



- பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை -
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்







**“மா**ற்றங்கள் சாத்தியம்! ஒரு காலத்தில் ‘ஆட்டுத் திருடன்’ என்று கண்டனம் செய்யப்பட்டவன் இன்னொரு காலத்தில் ‘புனிதன்’ என்று கொண்டாடப்படலாம். ஓர் அசலான மனமாற்றமும், பழைய வாழ்க்கைக்கு இனி திரும்பமாட்டேன் என்ற கெட்டியான வைராக்கியமும் இருந்தால் போதும், நீங்கள் புனிதர்களாக உருவெடுப்பதை யாரும் தடுக்கமுடியாது. தவக்காலம் இத்தகைய ஒரு மனமாற்றத்தைப் பெறச் சொல்லி நம்மை அழைக்கிறது. மாற்கு 1:15இல் இயேசு “மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்” என அறைகூவல் விடுக்கிறார். அதற்கு நம் எதிர்வினை என்ன?

ஒரு பாலைவன அனுபவத்திற்கு திருச்சபை இன்று நம் அனைவரையும் அழைக்கிறது. தவக்காலம்தான் அந்த பாலைவன அனுபவம். கடவுளுக்கும் நமக்குமான ஓர் அந்தரங்க உரையாடலின் காலம் இது. இஸ்ரயேலரோடு பேசியதுபோல, இயேசுவோடு பேசியதுபோல, கடவுள் நம்மோடும் நெஞ்சுருகப் பேச ஆசைப்படுகிறார். அந்த உரையாடலுக்கு நாம் தயாரா?

இந்த நாற்பது நாள்களும் நாம் பல பக்தி காரியங்களில் ஈடுபட இருக்கிறோம். செபம், விரதம், சிலுவைப்பாதை, திருப்பயணம், பிறர் அன்புச் செயல்கள் இன்னும் பலவுண்டு. இவை எல்லாம் நம்மை இன்னும் கொஞ்சம் ஆன்மீக ரீதியாக உன்னதப்படுத்த வேண்டும். கடவுள் நமக்காக வைத்துள்ள திட்டத்தை நாம் அடையாளம் கண்டு, அதை நம்முடையதாக வரித்துக்கொள்ள வேண்டும். மேலும், இந்தத் தவக்காலம் நம் வாழ்வில் சில திட்டவட்டமான மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும். நாம் முன்னரே பார்த்தது போல, மாற்றங்கள் சாத்தியமே. என்ன, கொஞ்சம் மெனக்கெடல் வேண்டும். நாம் தொடர்ந்து செய்யும் தவறுகளை, உவப்பில்லாத பழக்கங்களை, பலவீனங்களை அலசி ஆராய்ந்து, அவற்றின் ஊற்று எதுவெனத் தேடி அவற்றை வைராக்கியமாக உதற வேண்டும். அப்போதுதான் தவக்காலம் அர்த்தப்படும்.

தவக்காலம் இறை மனித உறவைப் புதுப்பிக்கும் காலம்; சுருங்கிப்போன இதயத்தை விசாலமாக்கும் காலம்; சுயநலத்தால், ஆணவத்தால், அதிகாரத்தால் தேங்கிய குட்டையான வாழ்வை ஓடும் நீரோடையாக மாற்றும் காலம். இயேசுவின் பாலைவனச் சோதனைகள் நாற்பது நாள்கள் என குறிப்பிடப்படுகிறது. எனவே தவக்கால நாற்பது நாட்கள் நம்மையே சுயஆய்வு செய்து சோதனைகளைக் கடந்து இறைவனின் அருளைப் பெறும் காலம். இக்காலத்தில் நம்மையே புதுப்பித்துக்கொள்ள திருச்சபை நமக்கு அழைப்பு விடுக்கிறது.

இதைத்தான் புனித பவுல் அடியார் “இதுவே தகுந்த காலம்” என்று கூறுகிறார் (2 கொரி 6:2). தவக்காலம் சாலை நடுவிலிருக்கும் எச்சரிக்கை விளக்குப் போன்றது. ***“நில். கவனி. செல்”***. ஆன்மீக வாழ்வின் எச்சரிக்கை தவக்காலத் தொடக்கமாகும். ***“நில்”*** என்று நம்மை எச்சரிக்கின்றது. உன்னை சுய ஆய்வு செய்து புதுப்பித்துக்கொள்ள ***“கவனி”*** என்று எச்சரிக்கின்றது. புதுப்பிக்கப்பட்ட பிறகு இனிமையான பயணம் தொடர உயிர்த்த ஆண்டவரோடு அல்லேலூயா பாட ***“செல்”*** என்று அறிவுறுத்தி

பாஸ்கா காலத்தில் நுழைகிறோம்.

தவக்காலத்துக்குக் குறிக்கப்பட்ட அறச் செயல்கள் மூன்று. அவை:

1. தர்மம் 2. இறைவேண்டல் 3. நோன்பு

**1. தர்மம்:**

ஏழைகளின் வறுமையைப் போக்குவது தர்மம். இயேசுவின் நற்செய்தி ஏழைகளுக்கான நற்செய்தி. ஏழைகள் பேறுபெற்றவர்கள் (லூக் 6:20). ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்க இயேசு அனுப்பப்பட்டார் (லூக் 4:18). நற்செய்தி அறிவிக்கப்படுகிறது (மத் 11:5). இயேசுவின் நற்செய்தி உண்மையாக அறிவிக்கப்பட்டால் ஏழைகளின் வறுமை ஒழிந்துவிடும். தொடக்காலத் திருச்சபையில் தேவையில் உழல்வோர் எவரும் காணப்படவில்லை (திப 4:34).

இயேசுவின் நற்செய்தியின் முதன்மையான நோக்கம் ஏழைகளின் வறுமையை ஒழிப்பதே! அவரது பணியின் முதல் திட்டம் வறுமை ஒழிப்புத் திட்டமே. உலகில் மிகவும் தாராளமாக கடவுள் செல்வங்களை வைத்திருக்கிறார். எல்லாருக்குமுரிய செல்வங்களை சிலர் பதுக்கி வைத்துக்கொள்வதால் உலகில் வறுமை நிலவுகிறது. செல்வர்கள் மனந்திரும்பி தங்கள் செல்வங்களை ஏழைகளுக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்பதே இயேசுவின் கண்டிப்பான கட்டளை.

இயேசுவைப் பின்பற்ற விரும்பிய செல்வரிடம் "உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்கு கொடும்" என்று இயேசு கட்டளையிடுகிறார். ஆனால் அவர்களதைச் செய்யவில்லை. இயேசு தம் சீடரிடம் "செல்வர் விண்ணரசில் புகுவதைவிட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது" என்கிறார் (காண். மத் 19:21-24). தன் உடைமையில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்த சக்கேயுவின் வீட்டிற்கு மீட்பு உண்டாகிறது (லூக் 19:8,9).

ஒருவர் செல்வத்திற்கும், கடவுளுக்கும் பணிவிடை செய்யமுடியாது (மத் 6:25). மண்ணுலகில் உங்களுக்கென செல்வம் சேர்த்து வைக்கவேண்டாம் என்பது இயேசுவின் கட்டளை (மத் 6:19).

**2. இறைவேண்டல்:**

வறுமையில் வாடும் ஏழைகளின் வறுமை நீங்கி வளமான வாழ்வு பெற இறைவனை வேண்டுவோம். செல்வர்கள் மனம்திரும்பி தங்கள் செல்வங்களை ஏழைகளுடன் பகிர்ந்துகொள்ள இறைவனை வேண்டுவோம்.

நம் நாட்டு மக்களின் சொத்துக்களை கொள்ளையடித்துக் குவித்துக்கொண்டிருக்கும் அரசியல்வாதிகள், அதிகாரிகள், அரசுப் பணியாளர்கள், வைத்தியர்கள் இப்படிப்பட்டவர்கள் மனம்மாறி தங்கள் பணிகளை நேர்மையுடன் செய்யவேண்டுமென்று இறைவனை வேண்டுவோம்.

நம் நாட்டிலுள்ள மதுக்கடைகள் அடியோடு ஒழிந்து நம் நாட்டு மக்கள் குடிவெறியிலிருந்து விடுபட வேண்டுமென்று உருக்கமாக வேண்டுவோம்.

பாலியல் பலாத்காரம் செய்யும் காமவெறியர்களும் மனம்மாறி நல்ல மனிதர்களாக மாற இறைவனை வேண்டுவோம்.

நமக்காகக் காயப்பட்ட இயேசுவின் வழியாக நோயாளிகள் எல்லோரும் குணமடைய வேண்டுமென இறைவனை வேண்டுவோம்.

இயேசுவின் இரத்தத்தினால் பாவிகள் எல்லோரும் மன்னிப்புப் பெறவேண்டுமென இறைவனை வேண்டுவோம்.

உடலுக்கு அடிமைப்பட்டு உடல் ஆசைகளுக்கும், உடல் இச்சைகளுக்கும் இடம்கொடுத்து எல்லாத் தீமைகளுக்கும் ஆணிவேரான பொருள் ஆசைக்கு அடிமைப்பட்டும் பாவங்களைச் செய்துகொண்டிருக்கும் பாவிகளுக்கு பரிபூரண விடுதலையும் மீட்பும் கிடைக்க இறைவனை வேண்டுவோம்.

எல்லார் மேலும் எனது ஆவியைப் பொழி வேன் என்ற இறைவன் எல்லாரையும் தம் ஆவியினால் ஆட்கொண்டு, அபிஷேகம் செய்து, ஆவியின் கனிகளால் நிரப்பி, கொடைகளால் அலங்கரித்து வரங்களைப் பொழிந்து வல்லமையைத் தந்து இயேசுவைப்போல, இயேசுவாக வாழச் செய்ய வேண்டுமென்று இறைவனை வேண்டுவோம்.

இறைவனிடம் நாம் வேண்டுவதைப் பெற்றுக் கொள்ளும்வரை இடைவிடாமல், மனந்தளராமல், சோதனைக்கு உட்படாமல் விழிப்பாயிருந்து மன்றாடிக் கேட்க வேண்டும்.

நம்மை விட்டு விலகாமல், நம்மைக் கை விடாமல் எப்போதும் நமக்குள் இருக்கும் இயேசுவோடு இணைந்து, தூய ஆவியின் துணை கொண்டு இறைவேண்டல் செய்ய வேண்டும்.

நமது இறைவேண்டலில் அன்னை மரியாவின் பரிந்துரையைக் கேட்டுப்பெற வேண்டும்.

புனித சாமிநாதர் இறைவனிடம் பேசிக் கொண்டிருப்பார் அல்லது இறைவனைப்பற்றி மனிதர்களிடம் பேசுவார் என்று சொல்லப்பட்டி ருக்கிறது. அவரை நாம் முன்மாதிரிகையாகக் கொள்வோம்.

### ૩. நோன்பு:

சிலர் இயேசுவிடம் வந்து "யோவானுடைய சீடரும், பரிசேயருடைய சீடரும் நோன்பிருக்க உம்முடைய சீடர் ஏன் நோன்பிருப்பதில்லை?" என்று கேட்டனர். அதற்கு இயேசு "மணமகன் தங்களோடு இருக்கும்வரை அவர்கள் நோன்பிருக்க முடியாது. ஆனல் மணமகன் அவர்களை விட்டுப் பிரியும் காலம் வரும். அப்போது அவர்கள் நோன்பிருப் பார்கள்" என்றார்.

இயேசு நான்பு இருந்தார். ஆனால், பழைய ஏற்பாட்டுச் சட்டங்களின்படியல்ல. அவர் தூய ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டார். அதே தூய ஆவியினால் பாலைநிலத்துக்கு அழைத்துச்செல்லப் பட்டார் (லூக் *4:1,2*). அங்கே நாற்பது நாள் இரவும் பகலும் நோன்பிருந்தார். அந்நாள்களில் அவர் ஒன்றும் சாப்பிடவில்லை. கடவுளின் வார்த்தை யினால் உயிர் வாழ்ந்தார்.

சீடர்கள் இயேசுவோடிருக்கும் வரையில் நோன்பிருக்கவில்லை. இயேசு அவர்களை விட்டுச் சென்றபின் அவர்கள் தூய ஆவியினால் ஆட் கொள்ளப்பட்டார்கள். தூய ஆவியார் காட்டிய நெறியில் அவர்கள் நோன்பிருந்தார்கள்.

இன்று நாம் சட்டப்படி உபவாசம் இருக்க வேண்டிய நாள்கள் சாம்பல் புதனும் தவக்கால அனைத்து வெள்ளிக்கிழமைகளும் ஆகும். ஆனால் ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் அவர் காட்டுகிறபடி அதிக நாள்கள் உபவாசமிருந்து இறைவேண்டல் செய்கிறார்கள்.

தவக்காலத்தில் வாழ்வின் ஆடம்பரங்களை அறவே ஒழித்து உடலின் தேவைகளை இயன்ற அளவில் குறைத்துக் கொள்ள வேண்டும். கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ வேண்டும் (மத் *4:4*).

உண்மையான கடவுளை நமக்கு வெளிப் படுத்தியவர் இயேசுவே. அவரே உண்மைக் கடவுள் (காண் *1* யோவா *5:20*). எனவே கடவுளின் வாய்ச் சொல், இயேசு சொல்லிய சொல்லே. அவர் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டு அதன்படி செயல்படுகிற எவரும் பாறைமீது தம் வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவார். அவர் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டு அவற்றின்படி செயல்படாத எவரும் மணல்மீது வீட்டைக்கட்டிய அறிவிலிக்கு ஒப்பாவார் (மத *7:24-26*).

கொலை செய்யாதே என்பது முற்காலத்தவ ருக்குக் கூறப்பட்டது.

சினம் கூடாது என்பது இயேசு சொன்னது.

விபச்சாரம் செய்யாதே என்பது முற்காலத்த வருக்குக் கூறப்பட்டது.

இச்சையுடன் நோக்காதே என்பது இயேசு சொன்னது.

மண்ணுலகில் செல்வம் சேர்த்து வைக்கக் கூடாது என்பது இயேசு சொன்னது (மத் *5:21, 7:27*)

இயேசு கட்டளையிட்ட யாவையும் கடைப் பிடிக்கும்படி கற்பிக்க வேண்டும் (மத் *28:20*). இயேசு சொல்லிய வார்த்தைகளை நாமும் தொடர்ந்து கடைப்பிடித்தால்தான் உண்மையில் அவரது சீடராயிருப்போம். உண்மையை அறி வோம். உண்மை நமக்கு விடுதலை அளிக்கும் (யோவா *8:31-32*).

#### எப்படி நோன்பிருப்பது?

எப்படி நோன்பிருப்பது என்பதை மத்தேயு நற்செய்தியில் (மத் *6:6-12*) இயேசு தெளிவாக, அழகாக விளக்குகிறார்.

நோன்பிருக்கும்போது,

1. முக வாட்டமாய் இராதே *6:6*
2. மக்கள் உன்னைப் பார்க்க வேண்டும் என்று எதையும் செய்யாதே.
3. உன் தலையில் எண்ணெய் பூசி இயல்பாய் இரு *6:17*.
4. முகத்தைக் கழுவு. சோகமாய்க் காட்சி தராதே *6:17*.
5. மனிதனுக்கு மறைத்து கடவுளுக்குத் தெரியும்படி நோன்பிரு. ■■■■

**"நேருக்கு நேர் பேசினாலும் அவர்கள் இதயங்களுக்கிடையில் ஆயிரம் மைல்கள் இருக்கின்றன"**

••••

**"அளவுக்கதிகமான ஓய்வு மிதமிஞ்சிய வேதனையாகும்"**

# கிறிஸ்தவம்

# மாணவர் பக்கம்



- நில்மினி கஜேந்திரன்

மாதிரி வினாத்தாள் - பகுதி - 1

**தொடர்** XIII

**மாணவர் பக்கம்**
ஜனவரி 2022
விடைகள்

| | | |
|---|---|---|
| 1) 2 | 5) 2 | 9) 3 |
| 2) 2 | 6) 2 | 10) 1 |
| 3) 4 | 7) 1 | |
| 4) 1 | 8) 5 | |

**1. ஆபிரகாம் இறந்ததும் ஈசாக்கும், இஸ்மயேலும் அவரை அடக்கம் செய்த இடம்.**

1. தாபோர் மலை  2. சிகிரியா குகை  3. ஏனோக் பள்ளத்தாக்கு
4. மக்பேலா குகை  5. ஒரேப் மலையடிவாரத்தில்

**2. ஈசாக்கு இயேசுவுக்கு முன்னடையாளம் என்பதற்கான ஓர் ஆதாரம்.**

1. ஆபிரகாமுக்கு மகனாகப் பிறந்தது
2. இஸ்மயேலுக்கு முன்னுரிமை கொடுத்தது
3. எரிபலிக்கு தேவையான விறகுக் கட்டைகளைத் தானே சுமந்து சென்றது
4. ஆபிரகாம் மூலம் இரு சந்ததிகள் உருவாகியமை
5. ஆபிரகாம் சாராளுக்கு மகனாகப் பிறந்தது.

**3. 'ஏசேக்கு' 'சித்னா' என்பதன் பொருள் யாது?**

1. சிரிப்பு  2. வாதாட்டம்  3. முன்கோபம்  4. உயர்வு  5. கலகலப்பு

**4. யாக்கோப்பிற்கு பணிப்பெண்ணான லேயாவின் மூலம் பிறந்தவர்கள் யாவர்?**

1. யோசேப்பு, பெஞ்சமின்  2. யூதா, நெப்தலி  3. தாண், நெப்தலி
4. காத், ஆசேர்  5. நாண், காத்

**5. ஆபிரகாம் இறைவனைக் கண்டுணர்ந்த இடம் எது?**

1. பெத்தேல்  2. கானான்  3. ஒரேப்  4. எபிரோன்  5. யோர்தான்

**6. "இரகபோத்து" என்பதன் பொருள் யாது?**

1. ஆண்டவர் பார்த்துக்கொள்வார்  2. ஆண்டவர் யுத்தம் செய்வார்
3. நீயே என் மகன்  4. ஆண்டவர் நம் எல்லையை விரிவுபடுத்தியுள்ளார்
5. அனைத்தும் ஆண்டவருக்குரியது.

**7. யாக்கோப்பின் மகளான தீனாவின் தாயார் பெயர் என்ன?**

1. லேயா  2. சில்பாள்  3. ரெபேக்கா  4. ராக்கேல்  5. மில்கால்

**8. யாக்கோப்பு யோசேப்பை அதிகம் நேசிக்க காரணமாய் அமைந்தது.**

1. லேயா மூலம் பிறந்ததால்
2. முதிர்வயதில் தனக்கு அவர் பிறந்ததால்
3. சகோதரர்களைவிட அழகாய் இருந்ததால்
4. அவர் மனைவியும் அதிகம் நேசித்ததால்
5. சகோதரர்களுக்கு அவர் வேலை செய்துகொடுத்ததால்

**9. இறைவனின் முகத்தை நேரில் கண்டும் உயிர்தப்பி பிழைத்தேன் என்று சொல்லி யாக்கோப்பு அந்த இடத்திற்கு இட்ட பெயர்:**

1. பெனியேல்  2. மறாக்கா  3. பெத்தேல்  4. காரான்  5. சீகார்

**10. இறைவன் ஈசாக்கு யாக்கோப்பு போன்ற தலைவர்களைத் தேர்ந்துகொண்டது.**

1. இறைவல்லமையைக் காட்ட  2. அவர்கள் நீதியானவர்கள் என்பதால்
3. இறைவனின் அன்பின் காரணமாக  4. இருவரும் உறவினர் என்பதால்
5. யாவும் சரி

# ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக
## For a Synodal Church

அருட் கலாநிதி அ. கிறிஸ்ரி றுபன் பெர்னாண்டோ

**தொடர் - 02**

**1.10 இந்த மாமன்றத்தின் நோக்கம் அல்லாதவை:**
இந்தக் கூட்டொருங்கியக்கப் பயணமானது முழுவதுமாக ஆன்மீகம் சார்ந்த ஒரு பயணமே என்பதை யாருமே மறந்துபோகக்கூடாது. இது வெறுமனே தகவல் சேகரிக்கும் பயிற்சிப்பட்டறையோ அல்லது இவை குறித்த தொடர்சியான கூட்டங்களோ அல்லது கருத்து விவாத மன்றமோ இல்லை என்பதை அனைவருமே தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். இந்த மாமன்றமானது தரவுகளை சேகரிப்பதையும், வெறுமனே ஆவணங்களை (Documents) வெளிக்கொணர்வதையும் நோக்கமாகக் கொள்ளவில்லை.

**1.11 இந்த இலக்கை அடைய தயாரிப்பில் முன்னெடுக்கப்பட வேண்டியவை:**
இறைமக்கள் தங்களின் வாழ்க்கை அனுபவங்களிலிருந்து தலத்திருஅவைக்கு இதைக் குறித்த கருத்துக்களை வழங்க வேண்டும். இறைமக்களை ஒன்று சேர்த்து தயார்படுத்த வேண்டும். இது உலக அரங்கிலே அனைத்து இறைமக்களுக்குமான அழைப்பு என்பதை அனைரும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

தலத்திருஅவையின் பங்களிப்பின் போக்கிலே இறைமக்களின் தேடல்களுக்கு செவிமடுக்க வேண்டும். உரையாடல்களை ஊக்குவிக்கவேண்டும். கருத்துக்கணிப்புக்கள், கருத்துப் பரிமாற்றங்கள் மேற்கொண்டு இறைமக்களின் கருத்துக்களைத் தேர்ந்துதெளிய வேண்டும். இறைமக்களின் கலாசாரம், வாழ்க்கைச் சூழ்நிலை, பின்னணி, வளங்கள், அவர்களுக்குள்ள தடைகள் இவற்றின் மத்தியிலே எப்படி இந்த ஒருங்கியக்க திருஅவையின் பயணத்திற்கு மறைமாவட்ட ஆயருடன் இணைந்து செயற்பட முடியும் என்பதை ஊக்குவிக்க வேண்டும்.

**1.12. மாமன்றம் குறித்த இந்த தயாரிப்பின் தொடக்கப்புள்ளி:**
இறைமக்களின் அந்தந்த இடத்திற்குரிய சூழ்நிலைகளை (Geographical Background, Emotional Background) வாழ்க்கை நிலையினை (Taditional Living) தொடக்கப் புள்ளியாக வைத்தே முதற்கட்ட நிலைக்கான ஆயத்தம் தொடங்கப்படல் வேண்டும்.

**பகுதி – 2**

**உலக ஆயர்கள் மாமன்றத்திற்கான கருப்பொருள் விளக்கம்**

**2.1 கருப்பொருளை மையம் கொண்டுள்ள ஏனைய மூன்று வார்த்தைகள்**
ஒன்றிப்பு (communion) - ஒன்றிப்பு என்பது ஒன்றாவது, உயிரோட்டம் பெறுவது, நம்பிக்கை தருவது, நன்மையான எண்ணங்களை பெற்றுக்கொள்வது ஆகும். மூவொரு கடவுளுக்கிடையிலே காணப்படும் ஒன்றிப்பே நாம் கொண்டிருக்க வேண்டிய அன்பிற்கும் ஒன்றிப்பிற்கும் சிறந்த உதாரணமாகத் திகழ்கின்றது.

**2.2. ‘பங்கேற்றல்’ –** Participation
பங்கேற்றலானது ஒருத்தர் மற்றவருக்கு செவிமடுத்தலையே தலையானதாகக் கொண்டுள்ளது. காரணம், ஒருவர் மற்றவருக்கு ஆழ்ந்து செவிமடுக்கின்றபோது தூய ஆவியார் அவர்கள் வழியாக திருஅவைக்கு என்ன சொல்ல வருகின்றார் என்பதைத்

தேர்ந்து தெளிந்தருள முடியும். ஒவ்வொரு வரும் தூய ஆவியாரிடமிருந்து பெற்றுள்ள சிறப்பு அருள்வரங்களைக் கொண்டு அயலவர் களுக்கு சேவை செய்வதையே பங்கேற்றல் என்பது (participation) அடிப்படையாகக் கொண்டுள்ளது. சர்வதேச இறையியல் ஆணையம் (ITC), 67-68).

2.3 **'பணி'** – Mission
திருஅவை அறைபரப்புப் பணியை ஆற்றவே ஏற்படுத்தப்பட்டு, அதன் இருப்புத் தன்மை யிலே நிலைத்து நிற்கின்றது. இந்த வகை யிலே, எவருமே தங்களது சொந்தக் காரியங்க ளில் மாத்திரம் கவனம் செலுத்த முடியாது. மாறாக, அனைத்து சமூகங்கள் மத்தியிலும் கடவுளின் அன்பிற்கு சான்று பகர்வதே ஒவ்வொருவரின் பணியாகத் திருஅவையிலே காணப்படுகின்றது. மேலும், திருஅவையானது அன்பாலும், இரக்கத்தாலும், ஏற்றுக்கொள்வ தாலும், செவிமடுப்பதாலும், ஆன்மீக அரசியல் பொருளாதார கலாச்சார வட்டத்தினுள்ளே வெவ்வேறு நிலைகளில் வாழும் அனைவர் மத்தியிலுமே ஒரு சாட்சியாகத் திகழ முடியும். இந்த வகையிலே, "கூட்டொருங்கியக்கம்" (synodality) என்பது திருஅவை தனது மறை பரப்புப் பணியை பலனுள்ள விதத்திலே ஆற்றுவதற்கு ஒரு வழியாகவும், இறையரசு வருகையின் பணியிலே சாரமாகவும் (leaven) காணப்படுகின்றது.

2.4 **இந்த மாமன்றத் தயாரிப்பானது கட்டப்பட வேண்டிய அஸ்திவாரம்**
திருவிவிலியத்தை நன்கு வாசித்து தியானிப் பதிலும், தூய ஆவியாரின் செயலால் செபத் திலும் மற்றும் திருவழிபாடுகளிலிருந்து கிடைக்கப்பெறும் ஆன்மீக அனுபவத்தின் மீதும் நமது தயாரிப்புக்கள் ஊன்றியிருக்க வேண்டும். இவற்றிலேதான் இந்த மாமன்ற தயாரிப்புப் பயணம் கட்டப்படல் வேண்டும்.

2.5 **உலக ஆயர்கள் மாமன்ற தயாரிப்பை நாம் மேற்கொள்ளும் நடப்பு காலச் சூழ்நிலை**
பல தீமைகளின் மத்தியிலேதான் "ஒருங்கியக்க திருஅவையை"க் குறித்த உலக ஆயர்கள் மாமன்றத்திற்கான தயாரிப்புக்கள் இடம்பெற விருக்கின்றன. இவ்வாறான காலகட்டத்தில் தான், நம் திருஅவை மிகவும் தீர்க்கமான ஒரு சூழ்நிலையினை எதிர்கொள்ள வேண்டியி ருக்கின்றது.

2.6 **கூட்டொருங்கியக்கப் பயணத்திலே நாம் உருவாக்கிக்கொள்ள வேண்டிய மனநிலை:**
"ஒருவரின் பிரச்சினை அனைவரின் பிரச்சி னையே" என்ற கூட்டொருங்கியக்க மனநிலை யினை,

$. கூட்டொருங்கியமானது உரையாடு வதிலும் செவிமடுப்பதிலும்ஃ "பகிர்வு" மன நிலையை (Not in the material goods) வேண்டி நிற்கின்றது.

$. செவிமடுப்பதில் தாழ்ச்சி.

$. உரையாடலானதுநம்மைப் புதுமைக்கு இட்டுச்செல்ல வேண்டும்.

$. மனமாற்றம் மற்றும் ஏற்படும் மாற்றம் மட்டிலே நாம் திறந்த மனம்.

$. முற்சார்பு எண்ணங்களை விலக்க வேண்டும்.

$. அருள்நிலைக்கு அழைக்கப்பட்டவர்களால் இழைக்கப்படும் கொடுமைகள்.

$. நான் நிறைவடைந்தால் மட்டும் போதும் என்ற வைரசானது நம்மில் உருவாக்கும் நோயிலே சுகம்பெற வேண்டும்.

$. வெறும் சித்தாந்தங்களை (deologies) மேற் கொள்ள வேண்டும்.

$. நம்பிக்கை அதிகரிக்க வேண்டும்.

$. மாமன்றங்கள் எதிர்காலத்தைக் குறித்து கனவு காணும் நேரமாகவும், எதிர்காலத்திற்காக செலவளிக்கும் காலமாகவும் காணப்படுகின்றன.

2.7 **கூட்டொருங்கியக்க செயல்முறையில் யார் பங்குபற்ற முடியும்**
திருத்தந்தை பிரான்சிஸ், திருமுழுக்குப் பெற்றுள்ள அனைத்து இறைமக்களையும் மறைமாவட்டங்களில் தொடங்கப்படுகின்ற இந்த கூட்டொருங்கியக்க செயல்முறைப் பயணத்திலே கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுமாறு இந்தப் பயணத்திலே யாருமே பெண்கள் குழந்தைகள், அங்கவீனமுற்றவர்கள், அகதிகள், நாடுகடத்தப்பட்டவர்கள், வயோதி பர்கள், ஏழைகள் தங்கள் நம்பிக்கையை அறிக்கையிடாத கத்தோலிக்கர்கள் எந்தக் காரணங்களுக்காகவுமே விலக்கப்படக் கூடாது. இவர்களும் எவ்வாறான நிலைகளிலே

தங்களின் பங்களிப்பை மறைமாவட்டங்களில் இடம்பெறும் இந்த மாமன்றத் தயாரிப்புப் பயணத்திற்கு வழங்க முடியும் என்பதற்கான பரீட்சார்த்திய வழிமுறைகள் மறைமாவட்டங் களில் கட்டாயமாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**2.8. தவிர்க்கவேண்டிய ஆபத்துக்கள்**

$ கடவுளால் வழிநடாத்தப்படுவதற்குப் பதிலாக நம்மைநாமே வழிப்படுத்த விரும்பு கின்ற சோதனை.

$ நம்மிலும் நமது உடனடித் தேவைகளிலும் மாத்திரமே கவனம் செலுத்த வருகின்ற சோதனை.

$ பிரச்சினைகள் மாத்திரமே பார்ப்பதற்கு வருகின்ற சோதனை

$ கட்டமைப்புக்களை மாத்திரமே உற்றுநேக்கு வதற்கு வருகின்ற சோதனை

$ திருஅவையினுடைய புலப்படும் எல் லைக்கு அப்பாலே பார்க்கக்கூடாது என்ற சோதனை

$ கூட்டொருங்கியக்க செயல்முறைப் பய ணத்தின் குறிக்கோலில் நாளடைவில் கவனத் தைச் சிறகடிக்க வருகின்ற சோதனை.

$ முரண்பாடு மற்றும் பிரிவினைக்கு ஏது வான சோதனை.

$ ஏற்கெனவே திருஅவையின் செயற்பாடு களில் ஈடுபடுகின்றவர்களுக்கு மாத்திரம் செவிமடுக்க வருகின்ற சோதனை.

**பகுதி – 3**

**மூன்றாவது பகுதியிலே, மறைமாவட்ட ரீதியிலான தயாரிப்பும் பங்களிப்பும் விளக்கப்பட, விடைகாணப்பட வேண்டிய கேள்வி**

**3.1 மறைமாவட்டங்களில் தயாரிப்பு**

இந்த திருஅவையின் கூட்டொருங்கியக்கத் தயாரிப்பானது மறைமாவட்ட அளவில் ஒவ்வொரு தல ஆயர் தலைமையில் மறை மாவட்டத் தலத்திருஅவைகளில் அக்டோபர் 17ம் தேதியிலே, இந்த ஆயத்தத் தொடக்க நிகழ்வானது அதிகாரபூர்வமாகத் தொடங்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது இறை மக்களின் கருத்தறிதல் மற்றும் பங்கேற்புடன் நடைபெறும். அதன் அடிப்படையில் மறை மாவட்ட மாமன்றத்தில் கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெறும். அதுபோன்று திருப்பீட பல்வேறு துறைகள், இருபால் துறவு சபை தலைவர்கள் அமைப்பு, துறவியர் கூட்டமைப்புக்கள், பன் னாட்டு பொதுநிலை இயக்கங்கள், பல்கலைக் கழகங்கள் மற்றும் இறையியல் துறைகளுக்கும் கேள்வி தொகுப்புகள் அனுப்பிவைக்கப்படும். ஒவ்வொரு ஆயரும், 2021ம் ஆண்டு அக்டோ பர் மாதத்திற்கு முன் மறைமாவட்ட பிரதி நிதியை நியமிக்க வேண்டும். அவர் தலஆயர் பேரவையோடு இணைந்து செயற்படுவார். பின்னர் பொதுச் செயலகத்தோடு ஒத்துழைப் பதற்கு ஆயர் பேரவை ஒருவரையோ அல்லது ஒரு குழுவையோ நியமிக்கும்.

மறைமாவட்ட மாமன்றத்தின் பரிந்துரைகள் தல ஆயர் பேரவைக்கு அனுப்பி வைக்கப் படும். அந்தப் பேரவை அவற்றைத் தொகுத்து உலக ஆயர்கள் மாமன்ற பொதுச்செயலகத் திற்கு அனுப்பி வைக்கும். பொதுச்செயலகம் இவற்றை வைத்து முதல் வரைபுத் தொகுப் பைத் தயாரித்து 2022ம் அண்டு செப்டம்பரில் தலத்திருஅவைகளுக்கு அனுப்பி வைக்கும்.

– தொடரும் ...




நட்ஸ் வகைகளை நீரில் ஊறவைத்து சாப்பிடுவதுதான் சிறந்தது. ஏனெனில், பருப்பு வகைகள், விதைகள், நட்ஸ்களின் மேல்புறத் தோலில் பைட்டிக் அமிலம் (phytic Acid) இருக்கும். இது மனித உடலில் அதிகமாகும்போது, இரைப்பை பிரச்சினைகள் மற்றும் சத்துகளை உடல் உறிஞ்சுவதில் இடையூறு ஏற்படுத்தும். நட்ஸ்களில் உள்ள பைட்டிக் அமிலத்தை நீக்க, வெந்நீரில் ஊறவைத்துச் சாப்பிடுவதே சிறந்தது.

"வலிமையின்மை அதிகமாகும்போது பொய்யும் அதிகமாகும். வலிமை நேர் வழியில் செல்லும். வலிமையில்லாதவர் பொய் சொல்லாமல் இருக்க முடியாது"

- ரிக்டர்



# திசை மாறிய ஓடம்

டெனிஸ்டன் - சொறிக்கல்முனை

காலமெனும் நதியில்
கடக்க முனைகிறது ஒரு ஓடம்
காணும் கரையெலாம்
கற்பிக்கின்றது பெரும் பாடம்
கரையேற துடித்தே
கரைந்து அது வாடும்
கலங்கரை விளக்கை
கண் வலிக்க அழுதே தேடும்

ஞாலம் போடும்
கேளிக்கை கோலங்களை நாடும்
நாளும் நாளும்
நவ நாகரீகங்களை பாடும்
சூழும் அலையில்
நிலை குலைந்து ஆடும்
நின்மதி ஓய்வை
நினைத்து நீந்தியே மாழும்
காலமெனும் நதியில்
கடக்க முனைகிறது ஒரு ஓடம்

ஆன்மாவாம் அந்த ஓடம்
உலகியல் நதியிலே ஓடும்
கடவுளெனும் கடல் நோக்கி
காலமெனும் துடுப்பெடுத்து
உடல் பெற்ற ஓடக்காரன்
ஓட்டப்பாதை தடைகள் ஆயிரம்
குதித்து குதறும் அலையும்
கோர வெள்ளமும்
சதிராட்டமாடி திசைமாற்றி போகும்

கண் களியாட்டம் பார்க்கும்
கால் களவதை நாடும்
கை கையூட்டு வாங்கும்
மூக்கு பணத்தை முகரும்
வாய் வாய்மை பொய்க்கும்
காது கயமைகளை கேட்கும்
தோல் தொடுமின்பம் நாடும்
ஆன்மாவெனும் ஓடம்
அரை வழியில் தாழும்
பின் ஆண்டவனை அதெப்படி நாடும்

திசை மாறிய ஓடம்
திரும்ப பாதை தனை தேடும்
பரந்த நதியின் திருப்பங்களில்
பாதைகளை பிரசவித்து
ஓடக்காரனை ஓட்ட சொன்னால்
அலைகளில்லா அன்புக் கடல்
ஆண்டவனில்லம் நின்மதி நிச்சயம்

என் சொந்த வாழ்க்கையில் பலமுறை அனுஷ்டித்துப் பார்க்காத ஒன்றை மற்றவர்கள் செய்யும்படி நான் சொன்னதே கிடையாது. இதுதான் எனது பலமாகும்.

- மகாத்மா காந்தி

கள்ளத்தனத்தை விட்டுவிட்டால், ஒருவன் பேரின்ப வெள்ளத்தில் தளைக்கலாம்.

- வள்ளலார்



# ஒரு வெண்மணற் கிராமம்
## காத்துக்கொண்டிருக்கிறது



வ.அ. இராசரத்தினம்



தொடர் – 05

**அத்தியாயம் 5**

வீட்டினுள்ளே சந்தடியைக் காணவில்லை. அரைச்சுவருக்கு மேலே மரக்கிராதிகளடிக்கப்பட்ட விறாந்தையின் முன் கதவு மூடப்பட்டிருந்தது. தாமோதரம் பூந்தோட்டப் பாதை வழியே நடந்து மல்லிகைப் பந்தலை அண்மியபோது செளந்தரம் மண் குடத்தை இடுப்பில் வைத்துத் தண்ணீர் சுமந்து கொண்டு வந்தாள். வரும் வழியிலிருந்த குரோட்டன்களிலும் கனாஸ்களிலும் இருந்து நீர் சொட்டிக் கொண்டிருப்பதைப்போல அவள் பாவாடையிலும் கைகளிலும்கூட நீர் சொட்டிக் கொண்டிருந்தது. வைகறையின் குளுமையில், வெண்பனி தோய்ந்து, இளநகை சிந்தி அரும்பிக் கொண்டிருக்கும் மல்லிகையைப் போலவே அவள் தோற்றமளித்தாள். மானாக வெருண்டு, தாமோதரத்தைக் கண்டதும் அவள் ஓடி விடுவோமா என்று நினைத்து எப்படியோ சுதாரித்துக் கொண்டு தான் சுமந்து வந்த தண்ணீர்க் குடத்தைப் பயந்து போனவள்போல மல்லிகையின் அடியிற் சரித்தாள். சரித்து முடித்ததும் குடத்தை அங்கேயே வைத்து விட்டுப் பின் பக்கமாகத் திரும்புகையில் “எங்கே போகிறாய் மாமா இல்லையா?” என்று அதட்டலாகக் கேட்டான் தாமோதரம்.

“அப்பு தம்பலகாமம் போயிற்றார். நில்லுங்க வாறன்” என்று நாணிக் கொண்டே பின்பக்கமாகப் போனாள் செளந்தரம்.

தாமோதரம் அவளைத் தன் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு தன்னந்தனியனாகத் தம்பலகாமம் சென்றிருக்கிறான். அவளுக்கு அடித்திருக் கிறான். ஏன் அவளை முத்திமிட்டுக்கூட இருக்கிறான். அப்போதெல்லாம் எந்தக் கூச்சமும் அடையாதவள் இப்போது மட்டும் ஏன் இப்படி வெட்கப்படுகிறாள்.

ஆனாலும் அவள் வெட்கப்படுவதும் அழகாகத்தான் இருக்கிறது. அவன் எட்டாம் வகுப்புப் படிக்கையில் மூதூர் வேதக்காரவாத்தியார் வைத்திருந்த பைபிளிலிருந்து ஞானி சலமோனின் உன்னதப் பாடல்களைப் படித்திருக்கிறான். அந்தப் பாடல் வரிகள் அவன் ஞாபகத்திற்கு வந்தன.

என்னே உன் அழகு! என் அன்பே
என்னே உன் அழகு!

மயிர்கத்தரித்த பின் குளிப்பாட்டப்பட்டுக்
கரையேறும்

ஆட்டு மந்தை போன்றவை உன்பற்கள்.
உன் இதழ்கள் செம்பட்டு நூலிழைகள்.
கன்னங்கள் வெடித்த மாதுளம்பழம்
போன்றவை
உன் தனங்கள் இரண்டும்
லீலிகளின் இடையே மேயும்
இரட்டை மான்கன்றுகள்.

ஞானி சலமோனின் உந்நதப் பாடல் அடிகளைத் தாமோதரம் அசைபோட்டு நினைந்து பரவசப்பட்டுக் கொண்டிருக்கையில் சௌந்தரம் வீட்டினுட்புறமாக வந்து விறாந்தைக் கதவைத் திறந்து 'வாருங்கள் அத்தான்' என்று அவனை அழைத்தாள்.

'உன் நாவின் அடியிற் தேனும் பாலும் இருக்கின்றன' என்ற சலமோனின் அடிகளை நினைத்துக்கொண்டான் தாமோதரம். கதிரையில் வந்து அமர்ந்த பின் அப்பா எங்கே'? என்று மீண்டும் கேட்டான்.

சௌந்தரம் அறைக்கதவின் நிலையிலேயே சாா்ந்து கொண்டு நின்று ஏதோ சொல்ல வாயெடுத்த போது 'அவர் தம்பலகாமம் போயிற்றார். கோடைப் போக விதைப்புக்கு அங்கே வயல் உழக்கிறாங்க, பெருமிதியை முடிச்சுக் கொண்டுதான் வருவார்' என்று சொன்ன அவள் தாய் அபிராமி, 'இருங்க தம்பி வாறன்' என்று விட்டு மீண்டும் பின்புறமாக அடுக்களைப் பக்கம் நடந்தாள்.

அவள் தம்பலகாமத்திற் பிறந்தவள். அங்கே நாயன்மார் திடல் ஆலமரத்தடிக்குப் பக்கத்தில் அவள் பிறந்த வீடு இருக்கிறது. தெருவைக் கடந்து கரைச்சைத் திடலுக்குப் போகும் வயல் வெளியில் அவளுக்கு ஐந்து ஏக்கர் நீர்ப் பாய்ச்சற் காணி சீதனம். அந்த வயலை உழக்கத்தான் தன் மாமனார் சென்றிருப்பார் என்றெண்ணிக் கொண்டே உன்னோட நான் கோவம்' என்றான் தாமோதரம்.

'அதுதான் நேற்று வராததிலிருந்து தெரியுமே'

'ஓஹோ'

'என்ன ஓஹோ. இப்ப மாமாவைத் தேடிக் கொண்டு வந்தீங்களாக்கும். அவரில்லையெண்டு போப்போறீங்களாக்கும்'. என்று விஷமமாகச் சிரித்தாள் சௌந்தரம்.

தாமோதரம் முகத்தைச் சற்றுக் கடுமையாக்கி கொண்டு "நீ ஏன் பாடசாலைக்குப் போகல்ல'

'அதை உங்கட மாமாட்டக் கேளுங்க'

'ஏன்? அவர் போக வேண்டாம் என்றாரா? அவள் பதில் சொல்லவில்லை.

தாமோதரம் மீண்டும் பேசினான். "அப்பா சொன்னார் என்று நீயும் போகாமல் இருந்திற்றாய். எல்லாம் நீ இந்த ஊரிலே பிறந்த கொடுமை. நீயும் தம்பலகாமத்தில பிறந்திருந்தாப் படிப்பை நிறுத்தியிருக்கமாட்டாய். இந்த நாட்டில முடியா தெண்டு அந்த ஊரில ஆணும் பெண்ணும் இந்தியாவுக்குப் போய்க் கிராஜுவேட் பண்ணிற்று வாறாங்க'.

சௌந்தரம் அதற்கும் மௌனமாகவே இருந்தாள்.

"இப்ப இந்தியாவுக்குப் போகத் தேவை யில்ல. எஸ்.எஸ்.சி. மட்டும் ஆலங்கேணியிலேயே படித்து ஆகக்குறைந்தது ஒரு ஆசிரியை ஆகலாம். ஆலங்கேணியில் முதலாவது ஆசிரியையாக நீ ஆவாய் என்று நான் கனவு கண்டேன்'.

அப்போதுங் கூடச் சௌந்தரம் தன் மௌனத் தைக் கலைக்கவில்லை!

'மாமாட்ட நான் சொல்லுறன். இனிமேலாவது நம்ம பாடசாலைக்குப் போறியா?'

பாடசாலைக்குப் போகாம விட்டு மூணுமாசத் துக்கு மேல ஆச்சு. இனிமேல் போறதெண்டா எனக்கு வெக்கமாக்கிடக்கு. மாமிகூட நான் பாட சாலைக்குப் போறத விரும்பல்ல' என்றிழுத்தாள் சௌந்தரம்.

'எல்லார்ர விருப்பத்துக்கும் நீ ஆட ஏலாது. நீ கட்டாயம் பள்ளிக்குப் போகத்தான் வேணும்' என்று கடுமையாகச் சொன்னான்.

'எனக்குஞ் சேர்த்து நீங்க படிச்சுக் கொள் ளுங்க. பின்னேரத்தில் நான் ரீச்சரிட்டத் தையல் படிக்கிறன் அது எனக்குப் போதும்'

'அப்ப நான் சொல்றதக் கேக்க மாட்டா?

இதற்குள் அடுக்களைக்குள்ளிலிருந்து அபிராமி வந்துவிட்டாள். டிஷ் ஒன்றிலே ஆவி பறந்து கொண்டிருக்கும் இராசவள்ளிக் கிழங்குப் புக்கையும் கரண்டியும் இருந்தது. அதை முன்னாலிருந்த ஸ்டூலில் வைத்து விட்டுச் 'சாப்பிடுங்க தம்பி' என்றாள். இதுதான் தருணம் என்று சௌந்தரம் வீட்டுக்குள்ளே போனாள். தாமோதரம் தன் விருப்பு வெறுப்புகளை வெளிக்காட்டிக்கொள்ளாமற் சாப்பிடத் தொடங்கினான்.

"என்ன தம்பி, பாடசாலை லீவு விட்டிற்றா. இன்னமும் இங்கிலீசுக்குச் சித்திரை பிறக்கவில்லையே" என்று கேட்டாள் அபிராமி.

"எங்கட வகுப்ப மட்டும் விட்டிற்றாங்க. ஆனா நான் வருஷம் கழித்து அடுத்த நாளே போகவேணும். ரியூசன் வகுப்பு இருக்கு. ஆவணியிலே சோதனை" என்றான் தாமோதரம்.

அபிராமிக்கு அதற்கும் மேலே என்ன பேசுவதென்று தெரியவில்லை. அவளும் கதவு நிலையிற்சாா்ந்து கொண்டு முந்தானைத் தலைப்பை முறுக்கிக் கொண்டு நின்றாள். கழுத்திலே கிடந்த கனமான தாலிக்கொடியும் கைகளிற் கிடந்த வளையல்களும் பளபளத்து மின்னின.

தாமோதரம் மீண்டும் பேச்சைத் தொடங்கினான். "மாமா எப்போது வருவார்?"

"அவர் விடியப்புறத்திலேயே போயிற்றார். இன்றைக்கு நல்ல நாள். பங்குனி உத்தரம். திருக்கிணாமலைக் கோணேசர் திருவிழா. பெருமிதியை இன்றைக்குத் தொடங்குவார். ஐஞ்சு நாளாவது ஆகும். புதன் கிழமைக்குப் பிறகுதான் வருவார்" என்ற அபிராமி. "ஏன் தம்பி நீங்க அவசரமா அவரைப் பாக்க வேணுமா?" என்று கேட்டாள்.

"இல்லை மாமி நாளைக்கு இங்க எம்.பி.வாறாராம். முக்கியமான வேலை இருக்கு. நானும் நிக்கவேணும் என்று எல்லாப் பொடியன்களும் சொல்றாங்க"

"அப்படியா? சாப்பிடவேயில்லையே. வைச்சது அப்படியே இருக்கே".

"போதும் மாமி" என்று தாமோதரம் சொல்லியபோது சௌந்தரம் பாற் கிளாசுடன் வந்தாள். பரமனின் சலூனிலிருந்து ரேடியோ "பாலும் பழமும் கைகளில் ஏந்தி" என்று பாடியது. தாமோதரம் பாலைக் கையில் வாங்கிக் கொண்ட போது, அபிராமி "நெல்லுத்தீஞ்சி மணக்கிறாப் போல இருக்கு" என்று சொல்லிக் கொண்டே அடுக்களைப் பக்கம் அவசரமாக ஓடினாள்.

தாமோதரம் பாலைக் குடித்துக் கொண்டே "நீ பள்ளிக்குப் போற சங்கதி இருக்கட்டும் இப்போது நீ எனக்கு ஒருவேலை செய்து தர வேண்டும்"

"என்னத்தான்"

"நாளைக்கு எம்.பி. இங்க வாறாராம். அவருக்குப் போட இரண்டு அழகான பூமாலை கட்டித்தர வேணும்"

"நான் எட்டாம் வகுப்புத்தானே பாஸ் பண்ணியிருக்கன். பள்ளிக் கூடத்தில் பத்தாம் வகுப்புப் படிக்கிற பெண்கள் இருக்காங்க. அவங்களிட்டச் சொன்னா ரீச்சரோடு சேர்ந்து அழகான மாலை கட்டித் தருவாங்க"

"அது தெரியாம கேட்கல்ல. ஆனா, இந்த ஊரில் நீதான் மால கட்றதில எக்ஸ்பேட்டாம் என்று ஊரெல்லாஞ்சொல்லுது. உன்னால் கட்டித்தர ஏலுமா? ஏலாதா? அதைச் சொல்லு" என்று சற்று ஆத்திரமாகவே கேட்டான்.

"எப்ப மால வேணும்"

"நாளைக்குப் பத்து மணிக்கு முன்ன ஏலுமா ஏலாதா என்று சொல் எனக்கு வேறு வேல இருக்கு" என்று எழுந்தான் தாமோதரம்.

"வீட்ட கொண்டு வரவா? அல்லது இங்க வந்து எடுப்பீங்களா?"

"நான் வராட்டித் தம்பியை அனுப்புறன்" என்ற தாமோதரம், "அம்மா எங்கே?" என்று கேட்டான்.

பின் கதவு வழியாகப் பார்த்த சௌந்தரம், "அம்மா அவித்த நெல்லைப் பாயில கொட்டிப் பரவிக்கொண்டிருக்கா" என்றாள் செந்தரம்.

தாமோதரம் வீட்டுக்குள் நுழைந்து. பின் கதவு வரை சென்று, "நான் போய் வாறன் மாமி" என்று கூறி விட்டு வழிநடந்தான்.

– தொடரும் ....

''புகழை விரும்பாத பொதுநிலைத்
தொண்டர் எவரோ அவரே உத்தமர்''



– பற்றி

# பாவமன்னிப்புச் செபம்!

**கடுகுக் கதை 118**

அன்ரன் தன் குடும்பத்தாருடன் இராவுணவின் பின்னர் கதைத்துக்கொண்டிருந்தார். எல்லோரும் 'பலதும் பத்தையும்' கதைத்துக்கொண்டிருந்தனர். அப்போது அன்ரனின் இளையமகன் தனது தகப்பனாரிடம்,

"அப்பா! இண்டைக்கு மறைக்கல்வியில நம்மட பாவங்களுக்காகவும் மற்றவங்களின்ட பாவங்களுக்காகவும் மன்னிப்புக் கேட்டு ஏசப்பாவிடம் மண்டாட வேண்டுமெண்டு ரீச்சர் சொன்னவ... வட கொரிய ஜனாதிபதிக்காக நான் மண்டாடினன்..." என்று சொன்னான்.

"நல்ல காரியம் செஞ்சாய் தம்பி...! ஏன் வட கொரியாவுக்கு போனநீ.... நம்மட நாட்டிலயும் இப்ப இருநூற்று இருபத்தைஞ்சுபேர் மற்றும் அவங்களுக்கு கட்டுப்பாடு விதிக்கிற மக்களால தெரிவுசெய்யப்பட்ட மற்றவர் என்று இருநூற்று இருபத்தாறு பேர் இருக்காங்க.... அவங்களுக்காகவும் மன்றாடு தம்பி! வேணுமெண்டா அவங்கட பெயரெல்லாம் எழுதித்தாறன்.... சத்தம் போட்டுச் சொல்லாம மனசுக்குள்ள சொல்லு.... இல்லாட்டி பிரச்சினையாப் போமிடும் ...." என்று அன்ரனின் உயர்தரம் படிக்கும் மகள் சொன்னாள்.

தன்னுடைய பிள்ளைகள் 'என்னமாய்ச் சிந்திக்கின்றார்கள்' என்று பெருமிதப்பட்டார் அன்ரன். 'நாற்பது வருடமாய் பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் தமிழ் மக்கள் பரிதவித்தபோது வாயே திறக்காத 'பெரிய மேய்ப்பர்' இப்பதான் அச்சட்டத்திற்கு எதிராக கையொப்பம் வைத்திருக்கிறார். 'தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும்' எண்டு அவருக்கு விளங்குதுபோல.... சின்னவனுடன் சேர்ந்து இவருக்காக நானும் பாவமன்னுப்புக் கேட்டு மண்டாட வேணும்' என்று மனதுள் எண்ணிக்கொண்டார் அன்ரன்.

## டிப்ஸ் ... டிப்ஸ் ... டிப்ஸ்



- தக்காளி சூப் நீர்த்துப் போய் விட்டால் மாவு கரைத்து விடுவதற்கு பதில், வெந்த உருளைக்கிழங்கு ஒன்றை மசித்து சேர்த்தால் ருசியும் கூடும் சத்தும் அதிகம் கிடைக்கும்.
- தொண்டை கட்டிக்கொண்டால்... கற்பூரவல்லி சாற்றுடன் பனங்கற்கண்டு சேர்த்து பருகினால் சரியாகிவிடும்.
- கேரட் அல்வா கிளறும்போது பால் ஊற்றுவதற்குப் பதிலாக பால்கோவா போட்டுக் கிளறி, ஏதாவது ஒரு எசென்ஸ் சில துளிகள் சேருங்கள்... பிரமாதமான சுவையில் இருக்கும்.
- வடை தட்டும்போது உள்ளே ஒரு பனீர் துண்டை வைத்து மாவால் மூடி எண்ணெயில் போட்டுப் பொரித்து எடுத்தால், வடை வித்தியாசமான ருசியுடன் இருக்கும்.
- பாகற்காய் குழம்பு செய்யும்போது, நாலைந்து துண்டு மாங்காய் சேர்த்து வைத்துப் பாருங்கள்... பாகற்காயின் கசப்பு தெரியாது ருசியும் கூடும்.
- சிறிதளவு இஞ்சியோடு மிளகு, தேங்காய்த் துருவல், பேரீச்சம்பழம், உப்பு சேர்த்து அரைத்து, தயிரில் கலந்தால், சூப்பர் சுவையில் பச்சடி தயார்.
- சவ்வரிசி, ரவை இரண்டையும் சம அளவு எடுத்து வறுத்து, பால் சேர்த்து வேகவிட்டு, வெல்லப்பாகு சேர்த்து, நெய்விட்டுக் கிளறினால், வித்தியாசமான சுவையுடன் சர்க்கரைப் பொங்கல் ரெடி!



# ஓயாத ஓலங்கள் ...

ஜே. எச். இரத்தினராஜா

எண்ணிக்கடக்கும் வாழ்நாளில் இன்னும் எத்தனை காலங்கள்தான் வாழப்போகின் றோமோ தெரியவில்லை. அதற்குள் மனிதன் மனிதனாக வாழும்போதுதான் தன்னையும், பிறரையும் உணரும் வாய்ப்பினைப் பெறுகின்றான். தன்னை உணர்ந்தவனுக்கே இத் தரணியில் மதிப்பும் மரியாதையும் உயர்கின்றது. பட்டப்படிப் புப் படித்து முடிப்பதனாலோ அல்லது பணத்தை மட்டும் சம்பாதித்துக் கொள்வதனாலோ அவன் மக்கள் மனதில் இடம் பிடித்துவிட முடியாது. நாம் கற்றுக்கொண்ட பாடம் எதுவோ, அதையே கடைப்பிடிக்கும் தன்மை முதலில் எங்களுக்குள் இருக்க வேண்டும்.

பணம் படைத்தவனுக்கு பிறருக்கு உதவும் மனப்பான்மை இருக்க வேண்டுமே தவிர, தான் பெற்ற அறிவையும், பணத்தையும் மூலதனமாகக் கொண்டு பிறரை அழிப்பதற்கும், இம்சிப்பதற்கும் ஒரு போதும் முயற்சிக்கக்கூடாது. முயற்சிப்பவனை மனிதனாக ஏற்றுக்கொள்ளவும் முடியாது.

பண வெறி என்பது பொதுவாக மனிதர்களுக் குள் உள்ள குணாதிசயங்களில் ஒன்றாகும். இது எந்த அளவிற்கு மோசமடைகின்றதோ, அந்த அளவிற்கு மன பாதிப்புக்களையும் அவலங்களை யும் தந்தேதான் தீரும். தன் தேவைகளுக்கேற்ப செல்வங்களையும், சந்தோசங்களையும் வளர்த்துக் கொள்ளும் மனிதன் மட்டுமே, இப்புவியில் மகிழ்ச் சியானதொரு வாழ்வை அனுபவிக்க முடியும். பணம் மட்டுமே வாழ்க்கை என்று கருதுவோர்களின் இல்லங்களில் சந்தோசம் நிலைப்பதில்லை. மாறாக சங்கடங்கள்தான் நிலைத்திருக்கின்றது. அதிலும், தன் தாய் தந்தையைப் பேணிக்காக்க மறந்தவர்கள், உடன் பிறந்த சொந்தங்களை உதறித் தள்ளியவர்கள், சொத்துக்காக அன்றாடம் சண்டையிட்டுப் பிரிந்து (வாழ்ந்தவர்கள்) வாழ்பவர் கள் இவர்கள் ஒரு போதும் தம் வாழ்நாளில் உண்மையான சந்தோசத்தை அனுபவித்திருக்க முடியாது. அனுபவிக்கவும் முடியாது.

உண்மையான சந்தோசம் என்பது நல்ல உணர்வுகளில்தான் தங்கியுள்ளது. இதை எம்மில் எத்தனை பேர் தான் அறிந்து வைத்துள்ளோம். கட்டுப்பாடற்ற மனத்தில் எழும் ஆசைகளினாலும், ஆனந்தத்தினாலும் தேவையற்ற சிந்தனைகளை வளர்த்துக் கொள்பவர்கள் தங்களை அறியாம லேயே அந்த நல்ல உணர்வுகளைக் கெடுத்துக் கொள்கிறார்கள். இதனால் உறவுகளை விட்டுப் பிரிந்தும் நீண்ட காலம் பகைவர்கள் போல் வாழ்ந்தும் மடிகிறார்கள். இந்த வாழ்வினூடாக நாம் பெறக்கூடிய சந்தோசம்தான் என்ன? உறவுகள் கூடியிருக்கும்போது கிட்டும் மகிழ்வினை நாம் எப்போதும் தனிமையில் பெற்றுவிட முடியுமா? காணிச் சண்டையும், வேலிச் சண்டையும் களம் இறங்கிய காலங்களில் சொந்த மாமன், சித்தப்பன், பெரியப்பன், அவர் தம் குடும்ப உறவினர்கள்

அனைவரையும் வளரும் இளம் சந்ததியினரான நாம் எவ்வாறு அறிந்து கொண்டோம், பகைவர்க ளாகத்தானே?.

இன்று சொந்த நாடும் இல்லை, வீடும் இல்லை சுடுகாட்டினில்தான் வாழுகின்றோம். இதற்கு முன்னர் எப்போதாவது நாம் இது போன்ற தொரு சூழ்நிலை வரும் என்பதை அறிந்திருந் தோமா? அறியாத காலங்களில் அநியாயமாக எங்கள் உடன் பிறந்த இரத்த உறவுகளின் சாவுக் குக்கூட நாம் காரணமாக இருந்திருக்கின்றோம் என்பதை இப்போதுகூட உணர மறுக்கும் சொந்தங் களை நாம் என்னவென்று சொல்வது? நம்பிக் கையின் பெயரால் அக்காலத்திலெல்லாம் பலரது சொத்துக்களுக்கு உரிமை கோரும் ஆவணங்களை முறைப்படி எமது முன்னோர்கள் பதிவிட்டுக் கொடுக்காத பட்சத்தில் இன்று நாடு இருக்கும் நிலையில் அந்த சொத்துக்களுக்கு ஆண் வாரிசு கள் உரிமை கோருவதும், இதற்காக மீண்டும் மீண்டும் சண்டையிடுவதும் நியாயமானதொரு செயலா? தன் வாரிசுகள் பண மலையில் படுத்து உறங்குகையிலும், உடன் பிறந்த சகோதரியின் சொத்தின் மேல் அதீத நாட்டம் கொண்டு தொடர்ந் தும் போராடும் இவர்களைப்போன்ற மனிதர்கள் வாழும் பூமியில் நிம்மதிக்கு வழி கிட்டுமா?

பிறக்கும் போதே ஒரு தாயின் வயிற்றில் கூடிப்பிறந்த சொந்தங்களே இவ்வாறு மனிதாபி மானம் அற்று நடக்கும்போது பிறரது செயற்பாடு களில் நாம் எவ்வாறு நம்பிக்கை கொள்ள முடியும்? தனக்கென ஒரு சொந்த நாடு இருந்தும் அகதியாக வாழும் ஈழத்தமிழர்களின் வாழ்வில் இப்படியும் ஒரு போராட்டமா? இவர்களைப் பொறுத்தவரையில் அண்ணன், தம்பி, அக்கா, தங்கை உறவுகளெல்லாம் இனிவரும் காலங்களில் வெறும் உறவு முறையாகத்தான் இருக்க முடியுமா?

கண்ணுக்கு எட்டிய தூரத்தில் இருந்த போதே அற்றுப்போன புரிந்துணர்வுகளும், அன்பும் கண் காணாத தேசத்தில் பிரிந்து வாழும்போது எவ்வாறு தொடர்ந்திருக்கும்? கேள்விக்குறியாக நிற்கும் எம் மக்களின் வாழ்வில் இழந்த சந்தோசங்களை ஒற்றுமையைக்கட்டி எழுப்ப என்றேனும் ஒரு நாள் அந்த நல்ல காலம் உலகில் தோன்றாதா? விஷக் கிருமிகளுக்குப் பயந்து, தான் வாழ்ந்த பூமியை விட்டுக் கொடுக்கும் இந்தக் கொடுமை யான நிகழ்வினைக் கண்டு பதைக்கும் மனங்க ளுக்கு ஒரு விடிவு காலம் பிறக்காதா? பல லட்சம் உயிர்களைப் பலி கொண்ட அநீதிக்கு முற்றுப்புள்ளி கிட்டும் வரைக்கும் இந்த ஓலமும் ஓயப்போவதில்லை என்பதுதான் உண்மையோ?

## பூமியைத் தாண்டி
## விண்ணிலும் தண்ணீர்



**ந**மது பூமியில் இருக்கும் தண்ணீரில் வெறும் 3.5 விழுக்காடு மட்டுமே மிகவும் தூய்மையான தண்ணீ ராக இருக்கின்றது. ஏரிகள். ஆறுகள். குளங்கள். நீரோ டைகள் என நீர் நிலைகள் எங்கும் நன்னீர் இருப்பதை நாம் காணலாம். பூமியின் 68 விழுக்காட்டிற்கும் அதிகமான நன்னீர். பனி. மற்றும் பனிப்பாறைகளில் அடைபட்டுள்ளது. மேலும். 30 விழுக்காடு நன்னீர் நிலத்தடியில் உள்ளது. சராசரியாக ஒரு கேலன் கடல் நீரில். 1 சிறு கோப்பை அளவிற்கு உப்பு உள்ளது. ஆனால் இது ஒவ்வொரு கடலுக்கும் ஏற்றவாறு மாறுபடுகிறது. எடுத்துக்காட்டாக. அட்லாண்டிக் பெருங்கடல் பசிபிக் பெருங்கடலை விட அதிக உப்புத் தன்மை கொண்டது. கடலில் உள்ள உப்புகளில் பெரும்பாலானவை நாம் அன்றாடம் உணவில் சேர்த் துக்கொள்ளும் அதேவகையான உப்புதான். அதாவது. சோடியம் குளோரைடு. உலகின் மிக உப்பு நிறைந்த நீர் அண்டார்டிகாவில் டான் ஜுவான் பாண்ட் என்ற சிறிய ஏரியில் காணப்படுகிறது. ஆக. ஒட்டுமொத்த மாகப் பார்க்கின்றபோது. தண்ணீரானது. பூமியில் உயிர்கள் உயிர் வாழ்வதைச் சாத்தியமாக்குகிறது. அதேவேளையில். நமது பூமியில் மட்டும்தான் தண் ணீர் இருக்கின்றது என்று நாம் நினைக்கக்கூடாது. நம் பூமியையும் தாண்டி நிலா. செவ்வாய் போன்ற கிரகங்க ளிலும் தண்ணீரானது பனிக்கட்டியாக உள்ளது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதன் காரணமாகத் தான் வானியற்பியல் வல்லுநர்கள் விண்வெளியில் தண்ணீரைத் தேடுவதே உயிரைக் கண்டுபிடிப்பதற் கான சிறந்த வழிமுறை என்று கருதுகிறார்கள். முக்கி யமாக. செவ்வாய் கிரகத்தில் தண்ணீர் இருப்பதற்கான ஆதாரங்ககள் அவ்வப்போது வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. இது மேலும் உண்மையென தெரிய வரும்பட்சத்தில். செவ்வாய் கிரகத்திலும் மனிதர் குடி யேறப்போகின்ற நாள் வெகு தொலைவில் இல்லை என்பதே நிதர்சனமான உண்மை.



# அன்பெனும் அடராய்

– ந. பார்த்தீபன் –
ஓய்வுநிலை உப பீடாதிபதி
வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி.

இப்போது முகப்புத்தகத்தில்... பாடப் புத்தகங்களைப் படித்தார்களோ... இல்லைப் படிக்கிறார்களோ... முகப்புத்தகத்தில் அதிகமாக படிப்பதால் தகவல் கொவிட் நைன்ரீன் வைரஸ் போல விரைவாகப் பரவி துக்க விசாரிப்புகள் முகப்புத்தகத்திலும்.. அதிலும் சில பொறுமை சாலிகள் ஆழ்ந்த அனுதாபங்கள் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திப்போம் என்று போட பலர் றிப்(*Rip*) என்று போட்டு தங்கள் அக்கறையைக் காட்டிக்கொண்டனர்.

வெளிநாட்டில் மட்டுமல்ல உள்நாட்டிலும் நேரம் பிரச்சினை.. நாங்களும் பங்குகொள்கிறோம் என்று அடையாளம் காட்டப் பழகிவிட்டோம். பரவாயில்லை. சில பேர் அதுவுமில்லை.

இந்தச் சடங்கு சம்பிரதாயங்களுக்குள் தற்போது ராஜன் இல்லை.

'அம்மா, அம்மா' என்று அரற்றிக் கொண்டும்... அழுது கொண்டும்.. தாயின் நினைவுகளோடு...

எவ்வளவோ கஷ்டங்கள் வீட்டில் இருந்த போதும் 'படி,.. படி...' என்று சொல்லிக் கொண்டே இருப்பா..

வீட்டுக் கஷ்டத்திற்காக சில வேலைகளுக்கு அவன் முயற்சிக்கின்ற வேளைகளில், 'தம்பி என்ன கஷ்டம் வந்தாலும் நானுன்னை எப்பாடுபட்டாவது படிக்க வைப்பேன்...' எனச் சொல்லி தடுத்து விடுவா..

நாட்டு நிலைமை மோசமாகி... தன்னோட்டைப் பொடியளும் அவர்களின் பெற்றோர்களும் இனி, ஒரு கணமும் இங்கை நிக்கேலாது... எங்கையாவது... சவுதி.... குவைத்துக்காவது அனுப்புவது தான் புத்திசாலித் தனமான வேலை எனக் கூறி அடுக்குகள் பார்க்கத் தொடங்கியபோது...

'அந்தச் சின்ன நாடுகளுக்குப் போய் நீ கஷ்டப்பட மாட்டாய். பெரிய நாடுகளுக்குப் போ' என்று சொல்லி விட்டா.

சில நம்பிக்கைகள் எங்கடையாக்களுக்கு... கனடா, இலண்டன், சுவிஸ் போன்றன பெரிய நாடுகளென்றும் மத்திய கிழக்கு நாடுகள் சிறிய நாடுகளென்றும் ஒரு நினைப்பு... போவதற்கான கிடைக்கும் ஊதியமும் செலவுப் பணமுந்தான் இந்த நினைப்புக்கான காரணம்.

மூன்று, நான்கு இலச்சங்களும் போகிற செலவும் முப்பது, நாற்பது ஆயிரங்கள் சம்பளமும் சின்ன நாடு. நாற்பது ஐம்பது இலச்ச போகிற செலவும் ஒன்று,இரண்டு இலச்சம் சம்பளமும் தான் பெரிய.... சிறிய வித்தியாசம்..

பணத்தாலேயே எல்லாத்தையும் அளக்கும் பக்கு வத்தை வளர்த்துவிட்டோம்.

தூரம், உழைப்பு, காலநிலை, சுய கௌரவம் தொடர்பான அறிவோ வேறுபாடுகளோ...தெரியாது. தெரிந்தாலும் கணக்கில் எடுப்பதில்லை... எடுக்க விரும்புவ துமில்லை.

ஆனாலும், பெரிய நாடுகளுக்குப் போனால் அகதியாக நீண்ட காலம் நிற்கலாம் என்பதும் மத்திய கிழக்கு நாடுகளில் இரண்டோ மூன்று வருடங்களில் திரும்ப வேண்டி நேரிடும் என்பதும் அவர்களுக்கு தெரிந்திருந்தது.

மகன் பெரிய நாடுகளுக்குப் போய்... இந்த நாட்டுக் கரைச்சலுக்குத் தப்பி, ஒட்டி வாழட்டும் என்ற நினைப்பு மட்டுமே தாய்க்கு இருந்ததும், அதற்காக காணிகளை ஈடு வைத்ததும் நகைகளை அடகு வைத்ததும் ஒரு சில உறவுகள், அயலவர்களிடம் கைமாற்றாக வாங்கிய துமாய்...

எத்தனை நேர்த்திகள், எவ்வளவு வேண்டுதல்கள், பிரார்த்தனைகள்....

சகோதரிகள் இரண்டு பேர் இருக்கிறார்கள் என்ற போதிலும் அவன் ஆம்பிளைப்பிள்ளை தப்பிக்கிப்பி இருந்தால் போதும்... எல்லாக் கடனையும் அழிச்சு... சகோதரிகளுக்கும் நல்ல வழி காட்டுவான் என்று என்னை நம்பி...

நினைத்து நினைத்து அரற்றிக் கொண்டும் அழுதுகொண்டும் இருக்கிறான்.

நண்பர்கள்,

“சரி மச்சான் சரி... இனி என்ன செய்வது? ராஜன் வா சாப்பிடு... இந்தா இந்த ரீயைக் குடி....”

“பிளிஸ் என்னை வற்புறுத்தாதேங்கோ....”

“அப்ப என்ன மச்சான் இப்பிடியே எத்தனை நாளைக்கு இருக்கப் போகிறாய்...?எழும்பு மச்சான்... எழும்பி முகத்தைக் கழுவு...”

ராஜன் சம்மதிப்பதாய்த் தெரியவில்லை. நண்பர்களுக்கு ஒரே யோசனை... தங்களுக்குள் கூடிக் கதைக்கிறார்கள். ஏற்கெனவே செய்த நடவடிக்கைகள் அவர்களுக்கு ஞாபகத்துக்கு வருகின்றது.

ராஜனின் பிரிஜ்ஜைத் திறந்து பார்க்கிறார்கள். புதிய ரீச்சர்ஸ் கொட்ஜ் விஸ்கிப் போத்தலொன்று இருக்கிறது. அதனைப் பார்த்ததும் இப்படியான சந்தர்ப்பங்களில் கவலையை மறக்க... இதுதான் ஒரேயொரு வழி...

அண்மைக்காலத் தீர்வாக பலரும் மேற்கொள்ளும் நடைமுறை... கொன்றால் பாவம் தின்றால் போச்சு...

அவர்களும் என்ன செய்வது? உறவுகளா... அயலவர்களா... ஆறுதல் சொல்லி அருகே இருப்பதற்கு...

எல்லோரும் வேலைக்குப் போக வேண்டும். இன்று நிற்பதே பெரிய காரியம்...

விஸ்கிப் போத்தல் காலியானது

ராஜன் தன்னை மறந்து தூங்குகிறான்... தாயையும் மறந்து... தாயின் நினைவுகளையும்.....?

– முற்றும்....



# தவத்தில் வாழ வாருங்கள் ...



– பி.ஜ. ஜெசுடி பொன்கலா

பனிப்பாறைகள் உருகி நீராகும் வாழ்விடம்,
இனிப்பாரினில் வாழ முடியாமல் போகலாம் – மனித
மேனிகளில் மறக்க முடியாத புதுவியாதிகள்,
கூனிக்குறுகி நிற்கும் மனிதாபிமானமற்ற செயல்கள் –
இதனால்
தனித்துவாழ், செபித்துவாழ், தவத்தில் வாழ்!

விண்ணில் நடப்பதெல்லாம் சாகசங்கள் – இம்
மண்ணில் நடப்பதெல்லாம் வித்தியாசமான அதிசயங்கள்,
கண்ணிருந்தும் குருடராய் வாழும் அற்புதங்கள்,
வேண்டுமென்றே நடக்கின்ற வீராப்புக்கள் – அதனால்
தொண்டையை திறந்தே செபித்துவாழ, தவத்தில் வாழ்!

இடர்கள் ஏற்படுவது இவ்வுலகத்தோருக்கே – அதனை
தொடர்கதை ஆக்காமல் இருக்க வேண்டுமானால்
சுடர்விடும் சோதியான இறைமகனை மன்றாடியே,
பேரிடர்தனை காத்திடுவீர் மக்களே! – அதனால்
கூடவே செபித்துவாழ, தவத்தில் வாழ வாருங்கள்!

“மற்றவர்களுக்கு நன்மை வேண்டும் என்று நினைப்பவன் தனக்கான நன்மையை ஏற்கெனவே சம்பாதித்துவிட்டான்” – கன்ஃபூஷியஸ் -

“நன்றி மறத்தலை விலங்குகள் மனிதனுக்கு விட்டு விடுகின்றன” – கோல்ட்டன் -

# இலக்கிய மஞ்சரி

## வ. அ. இராசரெத்தினம்



- ஆழியோன்

**ம**ட்டக்களப்பு பொதுநூலக வாசகர் வட்டம், மாதமொரு இலக்கிய நிகழ்வை "நூலக கேட்போர் கூடத்தில்" இவ்வாண்டு தொடக்கம் செயற்படுத்தி வருகின்றது. நீண்டகாலமாகத் தடைப்பட்டிருந்த இந்த நிகழ்வுகள் தற்போது மீண்டும் நடைமுறைக்கு வந்துள்ளன. மட்டக்களப்பு பிரதான நூலகத் தின் நூலகர் அவர்களினதும் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட வாசகர் வட்ட உறுப்பினர்களினதும் உற்சாகமான நடவடிக்கைகள் காரணமாக, பெப்ரவரி மாத நிகழ்வுகள் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களுக்காக ஏற்பாடு செய் யப்பட்டிருந்தது. இதில் திரு. அ.ச. பாய்வா அவர்கள் எழுத்தாளர் வ.அ. இராசரெத்தினம் அவர்கள் பற்றி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் எடுத்துரைத்தார். அதன் சுருக்கம் வருமாறு:



வ.அ.இ

காலங்களுக்கு ஏற்றவாறு தமிழ் தன்னை நெகிழ்ச்சிக்கு உட்படுத்திக் கொண்டே இருந்திருக்கிறது. சங்க இலக்கியங்கள், தமிழர் வாழ்வை முதலில் பாடல்கள் மூலம் சொல்லின. அதுவே பின்னர் ஐவகைப் பாக்கள், சந்தம், சிந்து என விஸ்தாரம் கொண்டு பத்தொன்பதாம் நூற்றாண்டில் செய்யுள் வடிவைப் பெறுகின்றது. பாரதியாருக்கும் இதில் கணிசமான பங்குண்டு.

செய்யுள் மரபு உரைநடையாக மாற்றம் பெற, முப்பதுகளில் தமிழில் சிறுகதைகள் வெளிவரத் தொடங்கின. இக்காலச் சிறுகதைகளில் "யாவும் கற்பனை" என்று எழுத வேண்டிய தேவையை நோக்கி நின்றன. இவை சிறுகதை என்ற அம்சத்துக் குள் அடங்காத கதைகள் என்றே கொள்ளப்பட்டன.

நாற்பதுகளில் தி. சம்பந்தன், இலங்கையர்க் கோன், வைத்தியலிங்கம் போன்றோரின் வர வால் "சிறுகதை" என்கிற அம்சம் துளிர்விடத் தொடங்கியது. இந்த இலக்கிய முயற்சிகள் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்ட அளவுக்கு கிழக்கு மண்ணிலிருந்து முகிழ்ப்புப் பெறவில்லை. விரல்விட்டு எண்ணக்கூடிய அளவுக்கு எழுதிய சிலரும் ஓரிரு படைப்புகளோடு வாலைச் சுருட்டிக்கொண்டார்கள்.

இந்தக் கலகட்டத்தில் கிழக்கிலிருந்து விஸ்வ ரூபம் எடுத்தவர்தான் வானா ஆனா. மாப்பசான், செக்கோவ் போன்றவர்களை வாசித்த அவருக்கு, அவர்கள் தங்கள் நோமண்டி பிரதேசத்தை இலக்கியத்தில் கொண்டு வந்ததுபோல் தனது கொட்டியாபுர மண்ணையும், மாவலி கங்கை யையும் தனது இலக்கியத்தில் கொண்டுவரும் நோக்கோடு *1948* லிருந்து எழுதினார்.

*1953*ல் அவர் எழுதிய "தோணி" ஈழகேசரியில் பிரசுரமாகி, இலக்கிய உலகை ஒரு உலுக்கு உலுக்கியது. "சிறுகதை" என்கிற வடிவத்தை கிட்டத்தட்ட முழுமையாகப் பெற்றிருந்த "தோணி", பலமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. இதன்மூலம் தனது கொட்டியாபுர மண்ணை உலக இலக்கியத்திற்கு அறிமுகம் செய் தார்.

மரபு அல்லது மண்சார்ந்த இலக்கிய மாகவே அவரது எழுத்து என்றைக்கும் நிகழ்ந்தது. முற்போக்கு, நற்போக்கு போன்ற கொள்கைகளோடு எடுபடாத அவர், நவீன இலக்கியம் என்பதற்குப் பதிலாக இலக்கியம் "கிளாசிக்" (Classic) ஆக இருக்க வேண்டும் என்பதை மட்டு மல்ல, மரபில் (பழம் இலக்கியங்கள்) காலூன் றியே புதுமையைப் படைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியவர்.

பெயர், பணம், புகழ் போன்ற (Prerequisit) முன் நிபந்தனை எதுவுமற்ற ஓர்மையான, தனித்துவமான இலக்கியவாதி. இலக்கியத்திற்காகவே இரு தடவைகள் சாகித்திய மண்டல விருது பெற்றவர்.

கொட்டியாபுரப் பற்றின் பூகோளவியலை அறியவிரும்பும் எவரும் தனது முன்னூறு சிறு கதைகளையும் வாசித்தால் போதும் என்று சொல்லுமளவுக்கு கிழக்கில் வேறு எவராவது இலக்கியம் படைத்துள்ளார்களா என்பது கேள்விக் குறிதான். •••



# எப்படிப் கண்டுபிடிச்சீங்க....?

"என்ன சேர் .... சாப்பாடு முடிஞ்சா....?"

"இப்பதான் சாப்பிட்டு முடிச்சன்"

"பக்கத்துப் பக்கத்து வீடுதான்.... இருந்தாலும் எப்பவாவது ஒரு நாள்தான் நாம இப்பிடி சாவகாசமா உக்காந்து பேசமுடியுது"

"உண்மைதான்...."

"நீங்க அசைவம் விரும்பிச் சாப்பிடுவீங்களோ?"

"ஹி...ஹி.... ஆமாங்க..."

"மனித மூளை வளர்ச்சிக்கு மீன் ஒரு சிறந்த உணவெண்டு சொல்றாங்க..."

"அப்பிடியா...?"

ஓம்... மீன் உணவு மூளையையும் நரம்பு மண்டலத்தையும் பலப்படுத்துதாம், அதோட கண் பார்வையையும் மேம்படுத்துதாம்... எண்டு ஊட்டச்சத்து நிபுணர்கள் சொல்றாங்க..."

"ஏன் அப்பிடி...?"

"மனித மூளையிலே உள்ள கொழுப்புப் பொருளில் 25 சதவிகிதம் டி.எச்.ஏ என்ற அமிலப் பொருளாள ஆனதாம். இந்த டி.எச்.ஏ மீன்களில் அதிகமா இருக்கும். தாய்ப்பாலில் கூட இது உண்டாம். கருப்பையில் இருக்கும் குழந்தைக்கு இது மிகவும் முக்கியமாம். வளர்ந்த ஆண் பெண்களுக்கு மன இறுக்கம், ஆவேச மனோபலம் போன்ற சில கோளாறுகள் டி.எச்.ஏ குறைவால் ஏற்படக்கூடிய வாய்ப்பு உண்டு என்று சொல்றாங்க"

"இதுல எவ்வளவு விவரம் இருக்கு. இது தெரியாமலேயே நான் மீன் சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறன்...."

"அதுதான் ஆரம்பத்திலேயே கேட்டேன்.... இன்னொரு விசயம் கூடக் கண்டுபிடிச்சன்...."

என்ன...?"

"நீங்க இண்டைக்கு கோழி பிரியாணியும் சாப்பிட்டிருக்கீங்க...."

"அட ஆமாங்க... அது எப்பிடி உங்களுக்குத் தெரியும்...?"

"இல்ல எங்கட வீட்டுக் கோழியக் காணல்ல.... அதுதான்...."

•••

## வினா விடைப் போட்டி - இல 35

**சரியான விடைகள்**

1. குழந்தைகள், சிறுவர்கள், இளைஞர்கள், இளம்பெண்கள், பெரியவர்கள், வறியவர்கள், வயோதிபர்கள், நோயுற்று நலம் நாடுபவர்கள், இடம்பெயர்ந்த அகதிகள், கிறிஸ்தவர்களாக இருந்து ஒதுங்கி வாழ்பவர்கள், ஆயர்கள், அருட்கன்னியர்கள் என 15 வகைப்பட்டவர்களைச் சித்தரிக்கின்றது.
2. உயிர்ப்பு
3. அந்நாட்டின் ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்கள், அடிநிலை மக்கள்
4. இணைந்து பயணம் செய்தல் அல்லது பாதையில் நடத்தல்
5. தூய ஆவியானவரின் வழிநடத்துதலைக் குறிக்கின்றது.
6. 1950ம் ஆண்டு
7. நெல்சன் மண்டேலா
8. "உனக்கு நான் என்ன செய்ய வேண்டும்" என்ற அன்பான கருணை மிகுந்த வார்த்தைகள்
9. கபீர்தாசர்
10. குழந்தைகள் தொழிலை ஒழித்தல், இன்னும் சீரிய எதிர்காலத்தை கட்டியெழுப்புதல்

***சரியான விடைகள் எழுதி 500/= பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:***

- **P. அனுஸ்ரிக்கா,**
  இல. 16/16, வெயிலி குறுக்கு வீதி,
  மட்டக்களப்பு.
- **மா. சில்வெஸ்ரர்,**
  525/08, திருமலை வீதி,
  மட்டக்களப்பு.
- R. **ரொக்சன்,**
  பிரதான வீதி,
  ஆறுமுகத்தான் குடியிருப்பு.

பங்குபற்றியோர் - 10 பேர்
சரியான விடை எழுதியிருந்தோர் - 02 பேர்

## உன்னை மறந்துவிடு!

*"ஒருவேளை நீ கடவுளைப்பற்றி நினைக்காததற்கு முதல் காரணம் நீ உன்னைப் பற்றியே அதிகம் நினைத்துக்கொண்டிருப்பதாக இருக்கலாம். ஒரு நிமிடம் உன்னையே மறந்துவிடு. அப்போது இறைவன் உன்னோடு பேசுவதைக் கேட்பாய்"*




அவர் ஒரு குரு.

யோக வித்தைகளை நன்கு அறிந்தவர். ஒரு சீடன் அடிக்கடி வந்து பணிவிடைகள் செய்வான்: அவர் சொல்லும் தத்துவங்களைக் கேட்பான். திடீரென்று ஒரு நாள் அவன் குருவிடம்,

"எனக்கு துறவி ஆகவே விருப்பம்..! ஆனால் என் குடும்பம் விடமாட்டார்கள் என்றுதான் பயப்படுகிறேன்" என்றான்.

குரு அவனிடம், "ஏன்...?" என்று கேட்டார்.

அவனோ, "அவர்களுக்கு என்மீது அளவுவில்லா பாசம். கொள்ளை அன்பு. என்னை பிரிந்து அவர்களால் இருக்கவே முடியாது, என்ன செய்வேன்..?" என்றான் சற்று கர்வத்துடன்.

“நீ வேண்டுமானால் அந்த பாசத்தை சோதித்துப் பார்கிறாயா...?" என்றார் குரு நிதானமாக. சீடன் சம்மதித்தான்.

குரு அவனுக்கு மரணமடைந்தது போலவே கிடக்கும் யோக வித்தையைக் கற்றுக் கொடுத்து, அதை வீடு சென்று உபயோகிக்குமாறு கூறினார். மறுநாள் அவன் இறந்ததாகவே உறவினர் நினைத்தனர்.

செய்தியறிந்து உற்றார் உறவினர்கள், நண்பர்கள் என எல்லோரும் அங்கு கூடி விட்டனர். வீட்டின் அழுகுரல் தெரு முழுவதும் கேட்டது. அவ்வேளை குரு அவன் வீட்டிற்குச் சென்றார். அவர்களைப் பார்த்து சொன்னார்,

"இவனுக்குப் பதிலாக யாராவது ஒருவர் உயிரைத் தர முன் வந்தால் போதும்... இவனை உயிர்ப்பிக்க என்னால் முடியும்..!"

அதைக் கேட்டு ஒவ்வொருவராகப் பின் வாங்கினார்கள். தாங்கள் வாழவேண்டிய அவசியங்களைக் கூறி அவருக்கு விளக்கினார்கள். இறுதியில் அவன் மனைவி உரத்த குரலில் சொன்னாள்,

"அவருக்குப் பதில் யாரும் சாக வேண்டாம்... அவர் இல்லாமலேயே நாங்கள் காலத்தை கழிப்போம்...!"

“நாம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் நடக்கும், நடக்கவிருக்கும் காரியங்கள் யாவும் நடந்தே தீரும்” என்று அவனுக்கு குரு விளக்கினார்.

....




எண்பது வயதுடைய ஒரு மனிதரின் இதயத்தில் சத்திரசிகிச்சை நடந்தது. நல்லபடியாக நடந்து முடிந்த பின் அவரிடம் ரூபாய் எட்டு லட்சத்திற்கான பில்லை மருத்துவமனை அதிகாரிகள் அவரிடத்தில் கொடுத்தனர். அந்த பில்லைப் பார்த்ததும் அவரால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அப்பெரியவரின் பரிதாபகரமான அழுகையைப் பார்த்த மருத்துவர் "அழாதீர்கள், என்னால் முடிந்தளவு உங்கள் பில்லைக் குறைத்து விடுகிறேன்" என்றார்.

அதற்கு பெரியவரின் பதில் "எனக்கு அது பிரச்சினையில்லை. பில் பத்து லட்சமாக இருந்தாலும் நான் தர தயாராகவுள்ளேன். ஆனால், எண்பது வருடமாக எவ்வித பிரச்சினையுமின்றி என் இதயத்தைப் பாதுகாத்த இறைவன் ஒரு ரூபாய் கூட பில் கேட்கவில்லையே! இவ்வளவு நாள் நான் இதனை உணர்ந்ததேயில்லை. இப்போது உணர்ந்த போது கண்ணீர் வழிகிறது. மூன்று மணி நேரம் மட்டும் நீங்கள் பாதுகாத்ததற்கு எட்டு லட்சத்திற்கு பில்... எல்லாம்வல்ல கடவுளின் கருணையையும் அன்பையும் நினைத்து அழுது விட்டேன்" என்றார்.

இறைவனின் அருட்கொடைக்கு நிகர் இறைவனே! நாம்தான் நன்றி கெட்டவர்களாக இந்த மண்ணில் வாழ்கிறோம். எந்த எதிர்பார்ப்புமே இல்லாமல் எப்பொழுதும் நம்மைக் கண்ணும் கருத்துமாகப் பத்திரமாகப் பாதுகாப்பவர் அன்பே உருவான இறைவன் மட்டுமே!

- லாலா லஜபதிராய் -



“நம்பிக்கையே என் மதம். தோல்விக்கு எப்பொழுதும் நான் தயார். ஒவ்வொரு தோல்வியிலும் வெற்றியைக் காண ஒரு புது வழி இருக்கிறது. ஆதலால் மனத்தளர்ச்சி கூடவே கூடாது”.

“விஷம் சாப்பிடும் முன்பே விஷமுறிவைச் சாப்பிடாதே”

- இலத்தீன்





# திருஅவைச் செய்திகள்

## பாகிஸ்தானின் இறை ஊழியர்

பாகிஸ்தான் நாட்டின் முதல் இறை ஊழியரான இருபது வயது நிரம்பிய ஆகாஷ் அவர்கள், அந்நாட்டு கத்தோலிக்கர், பயங்கரவாதச் செயல்களைத் துணிவோடு எதிர்த்து நிற்கத் தூண்டுதலாய் உள்ளார் என்று யூக்கா செய்தி கூறுகிறது. இவர் லாகூர் பகுதியில் புனித யோவான் ஆலயத்தின் பாதுகாப்புக்காக தானாக முன்வந்து பணியாற்றியவர். 2015ம் ஆண்டு மார்ச் மாதம் 15ம் திகதி, லாகூர் நகரத்தின் புறநகரில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்த யுஹானபாத் பகுதியில், புனித யோவான் கத்தோலிக்க ஆலயம் உட்பட இரு ஆலயங்கள் தற்கொலை குண்டுவெடிப்பால் தாக்கப்பட்டன. அந்நேரத்தில் புனித யோவான் ஆலயத்தில் ஞாயிறு திருப்பலியில் பங்குபெற்றுக்கொண்டிருந்தபோது ஏறத்தாழ ஆயிரம் கத்தோலிக்கரைப் பாதுகாப்பதற்காக, பயங்கரவாதிகளை ஆலயத்தில் நுழையவிடாமல் ‘‘நான் இறந்தாலும் பரவாயில்லை, உங்களை ஆலயத்தினுள் நுழையவிடமாட்டேன்’’ என்று போராடி வாசலிலே தடுத்தார் ஆகாஷ். ஆயினும் அந்நேரத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் ஆகாஷும், மற்றுமொரு குழந்தையும் உயிரிழந்தனர். அவர் உயிரிழந்த ஏழு ஆண்டுகளுக்குப் பின், இறை ஊழியராக அங்கீகரிக்கப்பட்டுள்ளார். இதன் வழியாக, ஆகாஷ் அவர்கள், பாகிஸ்தானில் அருளாளர் மற்றும், புனிதர் நிலைக்கு உயர்த்தப்படவுள்ள முதல் கத்தோலிக்கர் ஆவார். ஆகாஷ் அவர்கள், தனது உயிரைப் பணயம் வைத்து நூற்றுக்கணக்கான கத்தோலிக்கரைக் காப்பாற்றியவர் என்று, லாகூர் உயர் மறைமாவட்டம் அவரைப் போற்றி வருகிறது.

## அருள்பணி Lapsleyவுக்கு 39வது நிவானோ அமைதி விருது



தென்னாப்ரிக்காவில் நிறவெறிக் கொள்கைக்கு எதிராகவும், உலகின் பல்வேறு பகுதிகளில் சமுதாயப் பாகுபாடுகள் களையப்படவும், கடுமையாகப் போராடிய ஆங்லிக்கன் கிறிஸ்தவ சபையின் அருள்பணி Michael Lapsley அவர்களுக்கு, ஜப்பானில் 39வது நிவானோ பன்னாட்டு அமைதி விருது வழங்கப்படவுள்ளது. உலகின் பல்வேறு பகுதிகளில் அமைதியைக் கட்டியெழுப்பவும் உழைத்த அருள்பணி Lapsley அவர்களுக்கு, வருகிற ஜூன் மாதம் 14ம் திகதி டோக்கியோ நகரத்தில் நடைபெறும் நிகழ்வில் நிவானோ அமைதி விருது வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 1949ம் ஆண்டில் நியூசிலாந்தில் பிறந்த அருள்பணியாளர் அவர்கள், 1973ம் ஆண்டில் ஆஸ்திரேலியாவில் ஆங்லிக்கன் கிறிஸ்தவ சபையில் அருள்பணியாளரானார். பின்னர் தென்னாபிரிக்கா சென்று நிறவெறிக் கொள்கைகளுக்கு எதிராகப் போராடினார். நிவானோ அமைதி விருதைப் பெறும் அருள்பணியாளர் அவர்களுக்கு, சான்றிதழ் ஒன்றும், பதக்கம் ஒன்றும், 2 கோடி ஜப்பானிய யென் பணமும் வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

## ஒலிவ மலையை இணைக்கும் திட்டம்

இஸ்ரேல் நாட்டின் தேசியப் பூங்காவில், ஒலிவ மலைப் பகுதி உட்பட, கிறிஸ்தவ புனித இடங்களை இணைக்கும் அந்நாட்டு அரசின் திட்டத்திற்கு, புனித பூமியின் கிறிஸ்தவத் தலைவர்கள் தங்களின் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். இஸ்ரேலின் இயற்கை மற்றும், பூங்கா அமைப்பின் அதிகாரிகளின் (INPA) திட்டத்தின் படி, இஸ்ரேலின் தேசியப் பூங்காவை விரிவாக்கும் நடவடிக்கையில் திருஅவைக்குச் சொந்தமான நிலங்களும், கிழக்கு எருசலேமில் கிறிஸ்தவர்களின் புனித இடங்களும் இணைக்கப்படுவது குறித்து, அத்தலைவர்கள் தங்களின் கவலையைத் தெரிவித்துள்ளனர். புனித பூமியின் பாதுகாவலர் பிரான்செஸ்கோ பேட்டன், எருசலேம் கிரேக்க ஆர்த்தடாக்ஸ் முதுபெரும்தந்தை 3ம் தெயோபிலோஸ், எருசலேம் அர்மேனியன் முதுபெரும் தந்தை Nourhan Manougian ஆகியோர் கையெழுத்திட்டு, இஸ்ரேல் சூழலியல் அமைச்சர் Tamar Zandberg அவர்களுக்கு அனுப்பியுள்ள மடலில், ஒவ்வோர் ஆண்டும் இலட்சக்கணக்கான திருப்பயணிகள் பார்வையிடும் மிகவும் புனிதமான இடங்களில் ஒலிவ மலையும் ஒன்று என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசுவின் வாழ்வின் சில முக்கிய நிகழ்வுகள், ஒலிவ மலையில் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. ஒலிவ மலையின் புனிதத் தன்மையைப் பாதுகாப்பதிலும், திருப்பயணிகள் அங்குச் செல்வதற்கு வசதிகளை அமைத்துக் கொடுப்பதிலும், எங்களது கிறிஸ்தவ சபைகள், அயராது, கடுமையாய் உழைத்து வருகின்றன என்றும் அம்மடல் கூறியுள்ளது.




இலங்கைத் திருநாட்டின் அரசியல் நிலவரங்கள் அவ்வளவு திருப்தியானதாக காணப்படவில்லை என்றே அரசியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்: இதற்கு அரசியல் ஆய்வாளர்கள் தேவையில்லை: சாமானிய பாமரங்களே கதைத்துக் கூறுகின்றார்கள். பொருளாதார நிலைமையும் படுமோசமாக பலவீனப் பட்டு போய்விட்டது.

நான் பதின்வயதினை அடையமுன் ஒரு இறாத் தல் பாண் (சுமார் அரை கிலோ கிராம்) முப்பத்தைந்து சதம்: ஒரு இறாத்தல் சீனி எழுபத்தியிரண்டு சதம்: மண்ணெண்ணெய் ஆறு போத்தல் (ஒரு கலன்) ஒரு ரூபாய் ஐந்து சதம் (ஒரு போத்தல் என்பது எழுநூற்று ஐம்பது மில்லிலீற்றர்) ஒரு அரசாங்க கடைநிலை ஊழியரின் சம்பளம் அண்ணளவாக ரூபா நூற்று ஐம்பதிலும் குறைவு (மாதாந்தச் சம்பளம்). குடும்பச் செலவெல்லாம் போக மாத மொன்று முப்பது ரூபா மிச்சம் பிடிக்கலாம். வெண் சுருட்டு, மதுபானம் பயன்படுத்துபவர்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை. அவ்வேளையில் சீமெந்து ஒரு மூடை எட்டு ரூபாய், மதுபானம் ஆகக் குறைந்த தரம் ஒரு போத்தல் எட்டு ரூபாய். மக்கள் மிச்சம் பிடித்தார்கள்; வீடு கட்டினார்கள்.

ஸ்ரீமாவோ அம்மையார் பிரதமராக இருந்தபோது என்.எம். பெரேரா அவர்கள் நிதிஅமைச்சர். அவர் இரட்டைக் காலாநிதி பட்டம் பெற்றவர். பொதுவுடை மைவாதி. அப்போது வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக் கப்பட்டபோது மறுநாள் "வீரகேசரி" பத்திரிகையின் நான்கு அங்குல தடித்த எழுத்தில் தலைப்புச் செய்தி அனைவரையும் அதிரவைத்தது. "பஜ்ஜட்டில் துண்டு விழும் தொகை முந்நூறு கோடி ரூபாய்", என். எம். பெரேரா நிதிக்கட்டமைப்பைச் சிறப்பாக கொண்டு நடத்திக் காட்டினார். உள்ளூர் உற்பத்திகளைப் படிப்படியாக அதிகரித்தார்; இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தினார். எல்லார் வீடுகளிலும் மரவள்ளித் தோட்டம், மிளகாய்த் தோட்டம். ஒருவர் இரண்டு கொத்து அரிசிக்கு மேல் கொண்டு சென்றால் கைது செய்யப் படுவார் (இரண்டு கொத்து என்றால் எட்டு சுண்டுகள் - மூன்று சுண்டு என்பது தற்போ தைய ஒரு கிலோ கிராம் அரிசிக்கு சமன்).

விவசாயம் மிளகாய் செய்தவர்கள் இலட்சாதிபதியானார்கள்: மாவட்டம் விட்டு வேறு மாவட்டத்திற்கு அரிசி கொண்டு செல்ல (அனுமதிப்பத்திரமின்றி) தடை என்பதால் மாவட்ட ரீதியில் அரிசியில் தன்னிறைவு: ஒரு கொத்து அரிசியின் விலை ஒரு ரூபாய் பத்து சதம். மக்கள் பட்டினிக் கிடக்கவில்லை. பெரிதாக "புறுபுறுக்கவும்" இல்லை ஒவ்வொரு செவ்வாய் , வியாழக் கிழமை நாட்களில் உள்ளூர் போசனசாலை சோறு சமைக்கத் தடை: மரவள்ளிக்கிழங்கு அவியல்தான். வெளிநாட்டுப் பொருட்கள் இல்லை. உபாலி நிறுவனத்தாரின் "யுனிக்" ரேடியோக்கள்தான் அப்பொழுது பிரபலம். சேலைகள், காற்சட்டை துணிகள், துவிச்சக்கர வண்டி "ரயர்"கள் எல்லாம் கூப்பன்களில்தான் (பலநோக்குக் கூட்டுறவு சங்கங்கள்) வரிசை யில் நின்று பெறவேண்டும். இவ்வாறான சம்பவங்களால் அவ்வரசாங்கம் வீடு செல்ல வேண்டி யேற்பட்டது.

சில கிராமங்களில் ஒரு பேச்சுவழக் குண்டு, "இம்புட்டுக்கு அம்புட்டெண்டா, அம்புட்டுக்கு எம்புட்டு இரிக்கும்?" அதாவது "இவ்வளவுக்கே அவ்வளவு என்றால் அவ்வளவுக்கு எவ்வளவு இருக்கும்" என்பதே அதன் பொருள். இப்பொழுது ஒரு தேர்தல் நடந்தால் "எம்புட்டு இரிக்கும்?" என்று யோசிக்க வேண்டியிருக்கும். இரட்டைக் கலாநிதிப்பட்டம் (பொருளியலில்) பெற்ற என்.எம். பெரேராவையே (நிதி அமைச்சர்) தூக்கியெறிந்த மக்கள் .....?

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டும் என்று மக்கள் கையொப்பமிட்டு வருகின்றார்கள். இதில் வேடிக்கையென்ன

வென்றால், "இச்சட்டத்தை நீக்குவேன், ஜனாதிபதி முறையை ஒழிப்பேன்" என்று கூறி உச்ச அதிகாரத்திற்கு வந்த அம்மை யார், எதுவுமே செய்யாமல் வாளா இருந்துவிட்டு, இப்பொழுது அவரும் கையொப்பமிடுகிறார்.

இத்தடைச்சட்டம் நான்கு தசாப்த காலமாக அமுலில் இருந்தபோதும், தமிழ் இளைஞர்கள் இச்சட்டத்தின் மூலம் பந்தாடப்பட்டபோதும் மௌனமாக வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்த, நமது ஆன்மீக உச்ச பீடத் தலைவர்களும் அதில் கையொப்பம் இடுகின்றார்கள். ஏப்ரில் தாக்குதலில் தமிழர்கள் மட்டும் பாதிக்கப்பட்டிருந்தால் வேறுவகையில் நடந்திருப்பார்களோ தெரியாது... ●



## அறிவு மழை

**பையன்** : டீச்சர் ஏன் மழை பெய்கிறது?

**ஆசிரியை** : வயல்களில் பயிர் நன்றாக விளைவதற்கும் ஆறுகளில் தண்ணீர் ஓடுவதற்கும் குளம், குட்டை, கிணறு நிரம்புவதற்காகவும் பெய்கிறது.

**பையன்** : அப்படின்னா மழை அங்கே மட்டும் பெய்தால் போதாதா? ஏன் எல்லா இடத்திலும் பெய்ய வேண்டும்....?

## தந்தை மகனுக்கு ஆற்றிய உதவி

மணியின் வீட்டுக் கணக்கு நோட்டை ஆசிரியர் திருத்தினார்.

அவனைப் பார்த்து, "எப்படி ஒரு பையனால் இவ்வளவு தப்பு தப்பாகக் கணக்குப் போட முடிகிறது?" என்று கேட்டார்.

அதற்கு மணி, "நான் மட்டும் போடல்ல சேர், எங்கட அப்பாவும் சேர்ந்துதான் கணக்குப் போட்டார்..." என்றான் பெருமையாக.





## இலங்கை கத்தோலிக்க ஆர்வலர் கைதுசெய்யப்பட்டதற்கு கர்தினால் கண்டனம்

இலங்கையில் பெப்ரவரி 14ம் திகதியன்று, பொதுவெளியில் இளம் கத்தோலிக்க ஆர்வலர் Shehan Malaka Gamage அவர்கள், அநீதியான முறையில் கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகத் தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ள கொழும்பு பேராயர் கர்தினால் மால்கம் இரஞ்சித் அவர்கள், நாட்டில் கருத்துச் சுதந்திரத்திற்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றும், பயங்கரமான "வெள்ளை வாகனக் கலாச்சாரம் மீண்டும் திரும்புகிறது" என்றும் தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளார்.

அநீதியான முறையில் நிகழ்ந்துள்ள இந்தக் கைது நடவடிக்கையைக் 'கடத்தல்' என்று சாடியுள்ள கொழும்பு பேராயர் கர்தினால் மால்கம் இரஞ்சித் அவர்கள் 2019ம் ஆண்டு இயேசுவின் உயிர்ப்பு ஞாயிறன்று, வழிபாட்டுத்தலங்கள் மற்றும் உயர்தர உணவகங்கள் மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்து நீதிகேட்டு குரல் எழுப்புபவர்களை இந்த அரசு குறிவைப்பதாக வேதனை தெரிவித்தார்.

பொதுவாக காவல்துறை அதிகாரிகள் ஒருவரை கைது செய்யும் போது குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளைப் படிக்க வேண்டும் என்பது முறை, ஆனால், Gamage விடயத்தில் அது நடக்கவில்லை என்றும் காவல்துறை நடந்துகொண்ட முறையானது நாகரீகமற்றதும் ஒழுக்கக்கேடானதுமாகும் என்றும், இது மக்களாட்சிக்கு முற்றிலும் முரணானது என்றும் விவரித்துள்ளார் கர்தினால் இரஞ்சித்.

இஸ்லாமிய பயங்கரவாதிகள் மீது குற்றம் சாட்டப்பட்ட தற்கொலை குண்டுவெடிப்புகளுக்குப் பின்னால் மறைந்திருக்கும் நீதிக்காகவும், உண்மையைத் தேடுவதற்காகவும் பிரச்சாரம் செய்து வரும் பல ஆர்வலர்களுள் Gamage அவர்களும் ஒருவர். கோத்தபய ராஜபக்சே ஆட்சிக்கு வந்த அந்த ஆண்டின் இறுதியில், அரசுத் தலைவர் தேர்தலில் ஆட்சி மாற்றத்திற்கான நோக்கத்தில், ஒருவேளை, அரசியல்வாதிகளே இந்தக் குண்டு வெடிப்புகளைப் பயன்படுத்தினார்களா என்று கத்தோலிக்க ஆர்வலரான Gamage பகிரங்கமாகக் கேள்வி எழுப்பிவந்த நிலையில், அவர் இவ்வாறு அநீதியான முறையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

– வத்திக்கான் செய்திகள்

# தூய வாழ்வும்மைக் கூடும் ...!

■ அருட்பாவலர் நிலா தமிழின்தாசன்



தீயவழி தனிற்றோய்ந்து திசைமாறும் பாவியரைத்
திருத்தியிந்தப் பூவுலகில்
தூயவழிதனில் திருப்பித் துலங்கிடவே நல்வழியில்
நேயமுடன் உலவ வைக்க
ஆயரெனத் தாமுதித்த அற்புதர்தான் இயேசுவென அறிவீர்!
பூவுலகில் அன்றிருந்த
பாவியர்கள் தூயசுடர் ஆன எங்கள் அற்புதர்மேற் பழிசுமத்தி
கல்லெறிந்து பொல்லெறிந்து
கடியதுன்பம் பலபுரிந்து கல்வாரி மலைக் குன்றில்
கள்வரோடு நடுவிலெங்கள்
கனிவுடைய சுதனாரை முள்முடியும் தலைக்கேற்றி
ஈட்டி கொண்டு விலாவினிலே
குத்திக் கொடுமை செய்து குதூகலித்து மகிழ்ந்தார்கள்!
"அறியாமல் செய்கின்றார்"
என்றவர்கள் செய்த பொல்லாக் கொடுமைகளைப் பொறுத்தசுதன்
அவர்களையும் மன்னித்தார்
இன்றுவரை உலகமெங்கும் இறைமகனாய்த் தொழுகின்றார்
அருள்புரியும் ஆண்டவரோ அன்புருவம்,
பாவயிருள்தனைக் களையப்பாடுபட்ட நல்லிறைவன்,
பாதமலர் தனைத் தொழுவீர்!
அடிமையிருள், வறுமை, நோய் அனைத்துமவர் தீர்த்தருள்வார்.
பொறாமையொடு வஞ்சனைகள்
பொல்லாப்பழி, பாவம்புரிகின்ற சிந்தனைகள்
எல்லாம் மறந்த உள்ளம் -
கொண்டோராய் இறைமகனின் பாதம் தொழுது நிற்பீர்
தூயநல்வாழ்வும்மைக் கூடும் மகிழ்ந்திருப்பீர் ....



## 40 நாட்கள்

வாழ்விக்கும் இறைவனை உள்ளார்ந்த விதமாக அனுபவித்து அடைவதற்காக இறை அடியார்கள் 40 நாட்கள் தங்களையே தயார் செய்வது வழக்கம். கடவுளை உள்ளூர அனுபவித்து இன்புற தனிப்பெரும் தயாரிப்புத் தேவையல்லவா?

விவிலிய ஆதாரங்கள் மூலம் இதற்குச் சான்று பகரலாம்:

1. நோவேயின் காலத்தில் வெள்ளப் பெருக்கு 40 நாட்கள்.
2. இஸ்ராயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டினுள் புகுமுன் 40 ஆண்டுகள் பாலைவனத்தில் அலைந்தனர்.
3. கடவுளை இளந்தென்றலில் சந்திக்க முன் தயாரிப்பாக 40 நாட்கள் பாலைநிலத்தில் பயணம் செய்தார்.
4. சீனாய் மலையில் மோயீசன் 40 நாட்கள் உண்ணாது தவம் இருந்தார்.
5. கடவுளிடம் மன்னிப்புப் பெறுவதற்காக நினிவே மன்னரும், மக்களும், கால்நடைகளுக்குட்பட அனைவரும் 40 நாட்கள் தவமிருந்தனர்.
6. இயேசு தமது பொது வாழ்வைத் தொடங்குமுன் தயாரிப்பாக 40 நாட்கள் பாலைநிலத்தில் தவமிருந்தார்.
7. இயேசு உயிர்த்தபின்பு 40 நாட்கள் உலகில் தங்கி அப்போஸ்தலர்களுக்குக் கடவுளரசைப் பற்றியும், பரிசுத்த ஆவியை அனுப்புவது பற்றியும் எடுத்துரைத்த நாட்கள். விண்ணேற்படைந்து தந்தையின் வலப்புறம் அமரும் மகிமைக்கு முன் தயாரிப்பாகும்.

# பருப்பின் ஆரோக்கிய நன்மைகள்



**நா**ம் ஆரோக்கிய மாக இருக்க உதவும் பருப்பு வகைகள் எவை எவை, அதன் பலன்கள் என்னென்ன என்று பார்க்கலாம்.

**துவரம் பருப்பு**

துவரம் பருப்பில் நல்ல அளவில் புரோட்டீன், ஃபோலிக் அசிட் மற்றும் அத்தியாவசிய ஊட்டச் சத்துக்கள் நிறைந்துள்ளன. மலச்சிக்கல் பிரச்சினை ஏற்படுவதைத் தடுக்கின்றது.

**பாசிப்பருப்பு**

பாசிப்பருப்பில் விட்டமின் ஏ, பி, சி, ஈ மற்றும் கனிமச்சத்துக்களான கால்சியம், இரும்புச்சத்து மற்றும் பொட்டாசியம் அதிகம் உள்ளது. மேலும் உடல் எடையை குறைப்பதற்கு உதவியாகவும் இருக்கும்.

**பச்சை பயறு**

பச்சை பயறு சாப்பிட்டால், உடலில் உணவுகள் எளிதல் செரிமானமடைவதோடு, உடல் எடை மற்றும் கொலஸ்ட்ரால் குறையவும் உதவியாக இருக்கும்.

**கொண்டைக்கடலை**

கொண்டைக்கடலை உட்கொண்டால் இதய நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு குறையும். மேலும் இது உடல் சக்தியையும் அதிகரிக்கும்.

**மைசூர் பருப்பு**

மைசூர் பருப்பின் சிறப்பு புற்றுநோய் தாக்கத்தில் இருந்தும் காப்பாற்றும். உடலில் இரத்தத்தை அனைத்து உறுப்புகளுக்கும் சீராக கொண்டு செல்லும்.

**கடலைப் பருப்பு**

கடலைப் பருப்பு அதிகம் சாப்பிட உடல் வலுவோடு ஆரோக்கியமாக இருக்கும். குறிப்பாக இதனை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், நீரிழிவு மற்றும் கரோனரி இதய நோய் போன்றவை ஏற்படுவது குறையும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**சிவப்பு காராமணி**

சிவப்பு காராமணி புற்றுநோய், கொலஸ்ட்ரால் போன்றவை ஏற்படுவதைக் குறைக்கும். இதில் நிறைந்துள்ள விட்டமின் கே, மூளையின் செயல் பாட்டை சீராக வைக்கும்.



**தட்டைப் பயறு**

தட்டை பயறில் கரையக்கூடிய நார்ச்சத்து இருப்பதால், இது இதய நோய் ஏற்படுவதை தடுக்கும். மேலும் இதில் பொட்டாசியம், இரும்புச் சத்து, வைட்டமின் சி மற்றும் ஜிங்க் நிறைந்துள்ளது.

**உளுத்தம் பருப்பு**

இட்லிக்கு தாளிப்பதற்கு பயன்படுத்தும் உளுத்தம் பருப்பில், கொழுப்பு குறைவாகவும், புரோட்டீன் மற்றும் நார்ச்சத்து அதிகம் அடங்கியுள்ளது. மேலும் இதில் அத்தியாவசிய விட்டமின்கள் மற்றும் கனிமச்சத்துக்கள் நிறைந்திருக்கின்றன. ●●● ●●● ●●●

**"நாக்குதான் மனிதனைக் கொல்கிறது: நாக்குதான் மனிதனை காப்பாற்றுகிறது"**

**"போதித்துக்கொண்டிருக்காதே: முயற்சி செய்: சாதித்துக்காட்டு!"**

**"சந்தோசத்தைக் காண்பதற்கு ஒருவன் களைக்கும்வரை நடக்க வேண்டும்"**



வினாவிடைப் போட்டிக்கான அனுசரணை வழங்குபவர் : திரு. M.M. ஜெஸ்லிராஜ், M.J. மெகா எலெக்ரோனிக்ஸ் அன்ட் பேணிச்சர்ஸ்,142 A, விபுலானந்தபுரம், மயிலம்பாவெளி, மட்டக்களப்பு. தொ.எண்: 0779780151, 0775019977

## வினாவிடைப் போட்டி இல. - 37

1) புனித பேதுரு கூறும் அறிவுரையில் இறைவனில் மீட்பு திட்டத்தில் எவ்வாறான பங்களிப்பை வெளிப்படுத்துகிறது? ..........

2) இன்றைய திருச்சபையின் வழிபாட்டின் மைய இடத்தை பெறுவது எது? ..........

3) "விடுதலையற்ற வாழ்க்கை உயிரற்ற ஓர் உடலை போன்றது" என்று கூறிய மேதை யார்? ..........

4) மு. வரதராசனார் என்ற எழுத்தாளர் மூவகை அபிமானங்கள் பற்றி எழுதியுள்ள கட்டுரை யின் தலைப்பு என்ன? ..........

5) ஜேர்மனியில் உள்ள பாப்பிறை மறைப்பணி அமைப்புக்களின் (PMS) தேசிய இயக்குனர் யார்? ..........

6) "குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று" என்ற பழமொழியினை உருவாக்கிய நாடு எது? ..........

7) முக்திப்பேறு பெற்ற தேவசகாயம் எத்தனையாம் ஆண்டு எந்த இடத்தில் வைத்து கொல்லப்பட்டார்? ..........

8) ஒரு கிறிஸ்தவனின் முக்கியமான பணி என்ன? ..........

9) மூன்று வகையான உலக மாமன்றங்களும் எவை? ..........

10) திருத்தந்தை உலக சமூக தொடர்பு தினத்திற்கான செய்தியினை என்ன தலைப்பின் கீழ் பகிர்ந்துகொண்டுள்ளார்? ..........

பெயர் : ..........

முகவரி : ..........

பங்கு / தொ.பே.இல : ..........

அனுப்ப வேண்டிய தபாலகம் : ..........

முடிவுத் திகதி : 31.03.2022

அனுப்பவேண்டிய முகவரி :

**வினாவிடைப் போட்டி - 37**
**"தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**




**சரியான விடைகளை 1 கலாத்தியர் - எபேசியர் ஆகிய அதிகாரங்களில் இருந்து தெரிந்து எழுதவும்**

1. பவுல் அறிவித்த நற்செய்தி யாரிடமிருந்து அவருக்குக் கிடைத்தது?

   ..........................................................................................................................

2. "உன் வழியாக மக்களினங்கள் அனைத்தும் ஆசிபெறும்" என்னும் நற்செய்தி யாருக்கு அருளப்பட்டது? ..........................................................................................

3. ஆபிரகாமுக்கு மக்கள் இருவர் இருந்தனர். அதில் வாக்குறுதியின்படி பிறந்தவர் யார்? ..........................................................................................

4. தூய ஆவியின் கனிகள் எவை? ..........................................................................................

   ..........................................................................................................................

   ..........................................................................................................................

5. எவரும் எனக்குத் தொல்லை கொடுக்க வேண்டாம். ஏனெனில் என் ..............................
   .............................................. நான் இயேசுவுக்கு அடிமை என்பது அடையாளம்.

6. கடவுள் நம்மை யார் வழியாக எப்போது தேர்ந்தெடுத்தார்?

   ..........................................................................................................................

7. கிறிஸ்து வழியாக நாம் ஏன் படைக்கப்பட்டிருக்கிறோம்?

   ..........................................................................................................................

8. மீட்பு நாளை முன்னிட்டு உங்கள் மீது பொறிக்கப்பட்ட முத்திரையாக யார் இருக்கிறார்? ..........................................................................................

9. கணவர் யாரை விட்டு விட்டு தம் மனைவியுடன் ஒன்றித்திருப்பார்?

   ..........................................................................................................................

10. ஆண்டவரது பணியில் நம்பிக்கைக்குரிய திருத்தொண்டர் யார்?

   ..........................................................................................................................

**பெயர் :** ....................................................

**முகவரி :** ................................................
................................................
................................................

**பங்கு / தொ.பே.இல :** .............................

**அனுப்ப வேண்டிய தபாலகம் :** ....................

....................................................

<u>அனுப்பவேண்டிய முகவரி :</u>

**திருவிவிலியம் கற்போம் - 215**
**'தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**

முடிவுத் திகதி

**31.03.2022**

**(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)**




# போட்டி முடிவுகள்!



**திருவிவிலியம் கற்போம் – 213 விடைகள்**

1. மோசே
2. பாம்பாக
3. நாணற்கடல்
4. கொப்பளங்கள்
5. ஆபிபுமாதம்
6. “மாரா”
7. யாவே நிசீ
8. புளிப்பற்ற அப்ப விழா
   அறுவடை விழா
   சேகரிப்பு விழா
9. கெரீத்து ஓடையருகில்
10. ஆரோன் அவன் புதல்வர் நாதாபு, அபிகூ, யெயாசர், இத்தாமர்

**பரிசுகள் – அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குருஸ் CRS**

**போட்டியில் சரியான விடைகளை எழுதி ரூபா 400/= பரிசு பெறுவோர்:**

* **ரா. செபமாலை,**
குமாரபுர வீதி,
புன்னைச்சோலை.

போட்டியில் பங்குபற்றியோர் – 07 பேர்
சரியான விடையளித்தோர் – ஒருவர் மாத்திரம்

* செ. **சுஹாஜின்,**
இல. 54/17, 7ம் குறுக்கு,
இருதயபுரம் - மேற்கு,
மட்டக்களப்பு.

* A.E. **றியூபன்,**
61, கதிர்காமர் வீதி,
அமிர்தகழி,
மட்டக்களப்பு..

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 164 முடிவுகள்**

**1ம் பரிசு - 400/=**

* A. **ஈநோக் றிஷோன்,**
கதிர்காமர் வீதி,
அமிர்தகழி.

**2ம் பரிசு - 300/=**

* P. **டில்ருக்ஷி,**
பாதுவாபுரி,
பொத்துவில்.

**3ம் பரிசு - 200/=**

* **ஜெ. அன்ஷிகா,**
சூசையப்பர்புரம், சொறிக்கல்முனை.

பங்குபற்றியோர் – 14

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. **(ஆ - ர்)**



## எதையும் எதிர்பார்க்காதே!!!

ஒரு முறை ஜென் துறவி ஒருவர், தன் சீடர்களிடம் பேசிக்கொண்டிருந்தார். அப்போது அவரது சீடர்கள் துறவியிடம், கதை கூறுமாறு கேட்டனர். அதற்கு அந்த துறவியும், அவர்களுக்கு ஒரு வாழ்க்கை பாடம் புகட்டும் வகையில் கதை சொல்ல ஆரம்பித்தார்.

“வியாபாரி ஒருவன் ரோட்டில் நடந்து கொண்டு சென்றான். அப்போது அந்த வியாபாரிக்கு எதிரே வந்தவன் அவனை நிறுத்தி, ‘என்னை ஞாபகம் உள்ளதா?’ என்று கேட்டான். பின் ‘உங்களுக்கு என்னை நினைவு இருக்கிறதோ இல்லையோ, ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நான் இந்த நகரத்திற்கு வந்த போது, நான் என்னிடம் பணம் இல்லை என்று உங்களிடம் பணம் கேட்டேன். அதற்கு நீங்களும் என்னிடம் கொஞ்சம் பணத்தைக் கொடுத்து, ‘ஒருவரின் வெற்றிப் பாதையில் செல்ல இது உதவட்டும்’ என்று வாழ்த்தி உதவி புரிந்தீர்கள்” என்று அவருக்கு ஞாபகப் படுத்தினான். அந்த வியாபாரியும் சிறிதுநேரம் யோசித்து, பின், “ஆம், நினைவுக்கு வந்துவிட்டது” என்று சொல்லி, “வேறு என்ன சொல்லுங்கள்” என்று ஆவலுடன் கேட்டான். அதற்கு அவன் “இல்லை எப்படி அப்போது எனக்கு பணம் கொடுத்து உதவி புரிந்தீர்களோ, அதேபோல் இப்போதும் ஒரு சந்தர்ப்பம் கொடுக்க முடியுமா?” என்று கேட்டான். இதைக் கேட்ட அந்த வியாபாரி வியந்து போனான்” .

கதையைக் கூறி முடித்த ஜென் துறவி தன் சீடர்களிடம், “ஒருவர் நமக்கு ஒரு முறை எதிர்பாராமல் உதவி செய்தால், மீண்டும் மீண்டும் அவர்களிடம் எதையும் எதிர் பார்க்கக்கூடாது. நமக்கு எந்த நேரத்தில் எது கிடைக்க வேண்டுமோ, அந்த நேரத்தில் நமக்கு கிடைக்க வேண்டும் என்று இருந்தால், நிச்சயம் அது நமக்கு கிடைக்கும்” என்று சொன்னார். ●

## செயலின் பிரதிபலன்

ஜென் மாஸ்டர் ஒருவர் அவரது சீடர்களுக்கு, அன்றைய போதனையில் அவரவரின் செயல்களுக்கான பிரதிபலனை பற்றி விவரித்து கொண்டிருக்கையில், அதனை ஒரு கதையின் மூலம் விளக்க நினைத்து, கதையை சொல்ல ஆரம்பித்தார்.

“விவசாயி ஒருவர் 1 பவுண்டு வெண்ணெயை ஒரு பேக்கரிக்காரருக்கு விற்று வந்தார். ஒரு நாள் அந்த பேக்கரிக்காரர், விவசாயி கொடுக்கும் வெண்ணெய் ஒரு பவுண்டு அளவு சரியாக உள்ளதா? என்று எடை போட்டு பார்த்தார். அப்போது அளவு குறைவாக இருந்தது என்பதை தெரிந்து கொண்ட அவர் விவசாயி மீது கடுங்கோபம் கொண்டார். அதனால் ஆத்திரம் அடைந்து, அந்த விவசாயியை நீதி மன்றத்திற்கு அழைத்துச் சென்றார். அப்போது நீதிபதி விவசாயியிடம், “வெண்ணெயை அளந்து பார்க்க நீ எந்த எடை மிசினை உபயோகிக்கிறாய்” என்று கேட்டார். அதற்கு அந்த விவசாயி “நியாயம் ஐயா... நான் பழங்காலத்தவன், என்னிடம் சரியான எடை மிசின் இல்லை. ஆகவே நான் ஒரு அளவுகோல் கொண்டு அளவு செய்வேன்” என்று பதிலளித்தான்.

உடனே நீதிபதி “வேறு எப்படி வெண்ணெயை எடை செய்தாய்?” என்று கேட்டார். அதற்கு விவசாயி “ஐயா! பேக்கரிக்காரர் என்னிடம் நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே வெண்ணெய் வாங்குவது வழக்கம், நானும் அவரிடமிருந்து ஒரு பவுண்டு ரொட்டியை வாங்கி வருவேன். ஒவ்வொரு நாளும் பேக்கரிக்காரர் ஒரு பவுண்டு ரொட்டியைக் கொண்டு வந்த அதே சமயம், நானும் அதே அளவில் வெண்ணையை வெட்டிக் கொடுப்பேன். ஆகவே குறை, குற்றம் சொல்ல வேண்டுமெனில் அது என் தவறு இல்லை, அது முற்றிலும் பேக்கரிக்காரரையே சார்ந்தது” என்று சொன்னார்’ எனக் கதையை கூறி முடித்தார் துறவி.

பின் சீடர்களுக்கு, ‘நாம் மற்றவர்களுக்கு என்ன செய்கிறோமோ, அதே நமக்கும் விதிக்கப்படும்’ என்று கூறி விளக்கினார்.

**முகநூல் பக்கத்திலிருந்து .....**

## மட்டக்களப்பு மறைமாவட்டத்திற்கு மூன்று புதிய குருக்கள்





முதல்நன்மை, உறுதிப்பூசுதல் அருட்சாதனங்கள் வழங்கல்,
தூய காணிக்கை அன்னை ஆலயம்,



புதிய ஆலயம் திறப்புவிழா, கட்டுமுறிவு,
வாகரை

தூய அந்தோனியார் ஆலயத் திருவிழா,
புனானை



